செம்மணி

நிலம் 3 துகள் 116 வள்ளுவர் ஆண்டு 2052, 08 - 14 ஐப்பசி 2022 வாரமலர் பக்கங்கள் 31



# ராஜபக்சக்கள் மூன்று பேர் மீதும் பொருளாதாரக் குற்ற விசாரணை

## அடிப்படை உரிமை மீறல் மனுவை ஏற்றது உயர் நீதிமன்றம்

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களான முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச மற்றும் முன்னாள் நிதி அமைச்சர்களான மகிந்த ராஜபக்ச, பஸில் ராஜபக்ச ஆகியோரிடம் விசாரணை நடத்த உத்தரவிடக் கோரும் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வது என்று உயர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை தீர்மானித்தது.

ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் என்கிற அரச சார்பற்ற நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக என்பது தொடர்பில்

பக்கம் 03

# ரூபவாஹினி இலட்சினையில் மீண்டும் தமிழ், ஆங்கிலம்

ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது இலட்சினையை (லோகோ) மீண்டும் மும்மொழிகளும் அடங்கியதாக மாற்றிக்கொண்டது. வியாழக்கிழமை முதல் இந்த மாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது.

"இலட்சினை 9 மாதங்களுக்கு முன்னர் மாற்றப்பட்டது. எனினும் உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் பலதரப்பட்டவர்களும் விடுத்த கோரிக்கைகளை அடுத்து




வியாழக்கிழமை முதல் பழைய இலட்சினைக்கு மாறியுள்ளோம்" என்று கூட்டுத்தாபனத்தின் பதில்

பக்கம் 03

# முக்கிய பரீட்சைகள் மீண்டும் ஒத்திவைப்பு

இந்த ஆண்டுக்கான கல்விப் பொது உயர் தர மற்றும் சாதாரண தர பரீட்சைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சைகள் அடுத்த ஆண்டு தை மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. தை மாதம் 23ஆம் நாள் முதல் மாசி மாதம் 17ஆம் நாள் வரையில் இந்தப் பரீட்சைகள் நடத்தப்படும்

பக்கம் 31

# 4 மாதங்களில் 35 பேர் சுடப்பட்டுப் படுகொலை

## தொடரும் பயங்கரம்

இலங்கையில் கடந்த 4 மாதங்களில் 35 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். வைகாசி (மே) மாதம் 30ஆம் நாள் முதல் வெள்ளிக்கிழமை வரையில் இந்தக் கொலைகள் இடம்பெற்றுள்ளனன என்பதை காவல்துறைப் பேச்சாளர் மூத்த காவல் அத்தியட்சகர் நிகால் தல்துவ உறுதிப்படுத்தி

பக்கம் 02

## இரு தரப்புகளும் ஒதுக்கும்

# ஐ.நா. தீர்மானத்தை செயற்படுத்த 60 லட்சம் அமெ. டொலர் தேவை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் மீண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை ஊக்குவித்தல் என்ற தலைப்பில் மீண்டும் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத்

பக்கம் 31

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# நீதியையும் தீர்வையும் எப்படி அடைவது?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் மற்றுமொரு தீர்மானம் நிறைவேவற்றப்பட்டுள்ளது. இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை மேம்படுத்த ஊக்குவித்தல் என்கிற தலைப்பில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

50/1 என்று அடையாளப்படுத்தப்படும் இந்தத் தீர்மானம் இலங்கைக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் என்கின்றன தமிழ் ஊடகங்கள். ஒரு இலக்கை அடைய மீண்டும் மீண்டும் வழங்கப்படும் வாய்ப்புகளுக்கு கால அவகாசம் என்கிற பதம் எப்படிப் பொருந்த முடியும்? ஒரு தடவை அல்லது இரு தடவைகள் வழங்கப்படுவதைக் கால அவகாசம் என்று கூறினால் ஏற்கலாம். ஆனால், நிறைவேறுவதற்கான சாத்தியப்பாடுகளே இல்லை என்று தெரியும் விடயத்திற்கு காலஅவகாசம் வழங்கப்படுவதாகக் கூறப்படுவது அபத்தம். இனியாவது இந்தப் பதத்தை மாற்றிக்கொள்வதற்கு ஊடகங்கள் முன்வரவேண்டும்.

இது கால அவகாசம் அல்ல இலங்கை மீதான பன்னாட்டுக் கண்காணிப்பின் நீடிப்பு என்று தொடக்கம் முதலே விளக்கம் அளித்து வந்தார் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன். இந்தத் தடவையும் அதையேதான் சொல்லியிருக்கிறார். அது சரியாகவும் இருக்கிறது. ஆனால், இலங்கை தொடர்ந்து தவறு செய்வதையும் தீர்மானத்தை நிறைவேற்றாமல் தான்தோன்றித் தனமாக நடப்பதையும் ஐ.நா. கண்காணித்து அறிக்கையிடுவதால் மட்டும் என்ன நடந்துவிடப்போகிறது? தவறுகளைத் திருத்த வைக்க முடியாத கணிகாணிப்பாலும் அறிக்கைகளாலும் என்ன பயன்? இந்த அறிக்கைகள் என்றாவது ஒருநாள் தமிழர்களுக்குத் தனி நாடு கிடைப்பதற்கு வழிஏற்படுத்தும் என்கிற அபத்தமான விளக்கத்தை சுமந்திரன் தரமாட்டார் என்பது நிச்சயம். அப்படியிருக்கும்போது இலங்கையைத் தொடர்ந்தும் பன்னாட்டுக் கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதன் பயன் என்ன என்பதையும் சுமந்திரனேதான் தெளிவுபடுத்த வேண்டும். இந்தத் தீர்மானத்தால் ஈழத் தமிழர்களுக்கு ஒன்று மட்டும் மிகத் தெளிவானது, இத்தகைய அழுத்தங்களால் கொழும்பை ஒரு தீர்வை நோக்கி தள்ளுவது இயலாத காரியம். மிக மோசமனமா, குருதிச் சகதியான போரில் தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்ட கொடூரங்களுக்கும் அநீதிகளுக்கும் நீதி தேடும் பயணத்தில் பன்னாட்டு அழுத்தங்களும் தீர்மானங்களும் மட்டுப்பாடுகளை உடையவை. அவற்றால் நீதியும் தீர்வும் கிட்டும் என்று நம்பி இருப்பது தமிழ் இனத்தின் அழிவுக்கான வழியாக மட்டுமே இருக்கும். இந்தியாவை நம்பி இருப்பதும் ஐ.நாவை நம்பி இருப்பதும் வேறு வேறானவை அல்ல. அவற்றால் தமிழர்கள் பட்ட காயங்களுக்கு ஒத்தடம் வேண்டுமானால் தரமுடியுமே தவிர, நீதியோ தீர்வோ தரமுடியாது.

அப்படியானால் நீதியையும் தீர்வையும் அடைவதற்கான வழிதான் என்ன? அதைத்தான் தமிழ்த் தலைவர்கள், அரசியல்வாதிகள் முன்வைக்கவேண்டும். ஐ.நா. தீர்மானங்களுக்குப் பொழிப்புரையும் வரவேற்பு அல்லது எதிர்ப்பு வெயியிடுவதையும் விடுத்து நீதிக்கான தேடலையும் தீர்வை விரைவுபடுத்தும் வழிகளையும் தமிழ்த் தலைவர்கள் ஆராயவேண்டும், முனனெடுக்கவேண்டும், மக்களை ஆயத்தப்படுத்தி அவர்களை அந்தப் பயணத்தில் உள்ளீர்க்கவேண்டும். வழிகளைக் கண்டுபிடித்து அதில் மக்களை அழைத்துச் செல்பவர்களே தலைவர்கள், மக்களின் பெயரால் சுகபோகங்களை அனுபவிப்பவர்கள் அல்லர். தமிழ அரசியல்வாதிகள் தமது தலைவர்களுக்கான வகிபாகத்தை முழுமைப்படுத்த முன்வரவேண்டும்.



# ஐ.நா. தீர்மானத்தால் எந்த பாதிப்பும் வராது

## *உறுதியாகச் சொல்கிறார் தலைமை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன*

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தால் நாட்டின் வர்த்தகமோ நாட்டிற்குக் கிடைக்க இருக்கும் உதவிகளோ பாதிக்கப்படப்போவதில்லை. இந்தத் தீர்மானம் இலங்கையை எந்தவிதத்திலும் பாதிக்கப்போவதில்லை என்றும் அவர் உறுதியாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் எ-ழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே தலைமை அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆட்சியாளர்கள் தவறிய காரணத்தாலேயே இந்தத் தடவையும் தீர்மானம் நிறைவேறியது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த தினேஸ் குணவர்த்தன, அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் படிப்படியாக எடுத்து வருகின்றனர் என்று தெரிவித்தார்.

சிறையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை (அரசியல் கைதிகள்) விடுவிக்கும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அரச தலைவராக கோட்டாபய ராஜபக்ச இருந்தபோது பெருமளவு புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்றும் எஞசியிருப்பவர்களை விடுவிப்பதற்கான அறிவுறுத்தல்களைத் தற்போதைய அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பான சட்டமூலத்தின் மேலோட்டமா வரைவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும் விரைவில் முழுமையான வரைவு அமைச்சரவையில் முன்வைக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## 4 மாதங்களில்...

னார்.

இந்தக் காலப் பகுதிக்குள் 29 சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் 14 பேர் இந்தச் சம்பவங்களில் காயமடைந்துள்ளனர்.

பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலா மோதல்களே அனேகமான சம்பவங்களுக்குக் காரணம் என்று காவல்துறை தெரிவிக்கின்றது.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்கிற சந்தேகத்தில் 64 பேர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 15 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதை அடுத்து குற்றவாளிகளிடம் புழக்கத்தில் உள்ள ஆயுதங்களைக் களைவதற்கான சிறப்பு நடவடிக்கை ஒன்று தொடங்கப்பட்டுள்ளதாக காவல்துறைப் பேச்சாளர் தெரிவித்தார்.

# பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்குங்கள்

*இராஜாங்க அமைச்சர் டயானா கோரிக்கை*

இலங்கையில் பாலியல் தொழிலைச் சட்டபூர்வமாக்க வேண்டும் என்று கோரியுள்ளார் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே.
பௌத்த நாடான தாய்லாந்தும் பாலியல் தொழிலைச் சட்டபூர்வமானதாக்கியிருக்கும் நிலையில் இலங்கையிலும் அது குறித்து அச்சமடையத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.
கஞ்சா விற்பனையைச் சட்டபூர்வமாக்கவேண்டும் என்று முன்னர் கோரிக்கை முன்வைத்தவர் இந்த அமைச்சர். கஞ்சாவிற்குச் சட்டபூர்வ அனுமதி என்கிற தனது கோரிக்கையை ஆராய்வதற்காக ஒரு குழுவை நியமிக்கும்படி கோரி அரச தலைவரின் செயலாளருக்குக் கோரிக்கை அனுப்பி வைத்தபோதும் அதிகாரிகள் அதற்குத் தடையாக இருக்கிறார்கள் என்று டயானா குற்றஞ்சாட்டினார்.
பௌத்த நாடான தாய்லாந்தில் பாலியல் தொழிலைச் சட்டபூர்வமாக்கியதன் மூலம் மதத்திற்கோ அவரகளின் பண்பாட்டுக்கோ பாதிப்பு ஏற்படவில்லை என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், அதுபோன்றே இலங்கையிலும் பாலியல் தொழிலைச் சட்டபூர்மாக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

## ரூபவாஹினி....


முகாமையாளர் அஜந்த செனிவிரட்ன வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.
"அது பொதுவான கோரிக்கையாக இருந்தது. அதனால் பழைய இலட்சினைனையே திரும்பக்கொண்டு வருவது என்று முடிவு செய்யப்பட்டது. இதன் மூலம் சமூக அமைதியையும் திருப்ப முடியும் என்று கருதப்பட்டது" என்றார் அவர்.
கூட்டுத்தாபனத்தின் இலட்சினையில் ரூபவாஹினி என்ற பெயர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் காணப்பட்டது. ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சியைப் பிடித்ததைத் தொடர்ந்து அந்த இலட்சினையில் இருந்த தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் அகற்றப்பட்டு தனிச் சிங்களம் மட்டுமே இடம்பெற்றிருந்தது.
இதனைக் கண்டித்தும் தமிழ் மொழியை மீண்டும் கொண்டவரக் கோரியும் கூட்டுத்தாபனத்திற்கு வெளியே அண்மையில் தனியாளாக இளைஞர் ஒருவர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். டனுக்க ரணன்ஜக என்ற அந்த இளைஞன் கைகளில் பதாகைகயைத் தாங்கியபடி பல மணி நேரமாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.
சமூக ஊடகங்களில் இந்தப் போராட்டம் பரவலான கவனத்தைப் பெற்றது. ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் கடும் கண்டனங்களுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளானது. கூட்டுத்தாபனத்தின் உள்ளேயிருந்தும் பலர் அவரது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.
கூட்டத்தாபனத்தின் இலட்சினை மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியத்தை அடுத்து தனது சமூக ஊடகக் கணக்கில் கருத்துத் தெரிவித்த ரணன்ஜய "நான் கடைசியில் வென்றேன்" என்று தெரிவித்துள்ளார்.

## ராஜபக்சக்கள்...

ஆராய்ந்த நீதிமன்றம் வழக்கைத் தொடர்ந்து விசாரிப்பதற்கு அனுமதித்து.
அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்கள், இலங்கை நாணய சபையினர், இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஸ்மன் மற்றும் அஜித் நிவாட் கப்ரால், திறைசேரியின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆர்ட்டிகல, அரச தலைவரின் முன்னாள் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர, முன்னாள் நிதி அமைச்சர் அலி சப்ரி. நாணய சபையின் தற்போதைய உறுப்பினரான எஸ்.எஸ். டபிள்யூ.குமாரசிங்கே ஆகியோரும் இந்த வழக்கில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.
மனுவை விசாரித்த நீதியரசர்கள், வழக்கில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள் பொருளாதாரம் தொடர்பில் எடுத்த முக்கிய முடிவுகள் குறித்து விசாரணை நடத்த உத்தரவிட்டது. அத்தோடு, பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்குக் காரணமான முடிவுகள் எடுக்கப்பட்டபோதும் இப்போதும் நாணய சபையின் உறுப்பினர்களா இருக்கும் சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்த்தன மற்றும் கலாநிதி ராணி ஜெயமகா ஆகியோரையும் இந்த வழக்கில் பிரதிவாதிகளாகச் சேர்த்துக்கொள்ளும்படியும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.
இந்த வழக்கில் மேலும் **3** முக்கிய உத்தரவுகளையும் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.
அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் மதிப்பை **203** என்று மட்டுப்படுத்த நாணய சபை எடுத்த முடிவும் அதனோடு தொடர்புடைய முடிவுகள் தொடர்பாகவும், பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியைக் கோருவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்கள் தொடர்பிலும், அன்னியச் செலாவணி இருப்பைப் பயன்படுத்தி **18** தை **2022** அன்று **500** மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பிணை முறிக்கான பணம் செலுத்தப்பட்டமை தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பிலும், அத்தகைய கொடுப்பனவைச் செய்ததன் மூலம் இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்பட்ட இழப்புத் தொடர்பிலும் முழுமையாகக் கணக்காய்வு செய்து அதன் அறிக்கையை கார்த்திகை (நவம்பர்) **3-0**ஆம் நாள் முன்வைக்குமாறு இலங்கைக் கணக்காய்வுத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.
முன்னாள் அரச தலைவர், முன்னாள் நிதி அமைச்சர்கள், அமைச்சரவை, நாணய சபை, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்கள், திறைசேரியின் முன்னாள் செயலாளர் என்று வழக்கில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான தொடர்பாடல்கள் குறித்த அனைத்து ஆவணங்களின் பிரதிகளையும் கார்த்திகை **3-0**ஆம் நாளுக்கு முன்பாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கும்படி மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.
முன்னாள் நிதி அமைச்சர்களான மகிந்த ராஜபக்ச மற்றும் பஸில் ராஜபக்சவிற்கும் நாணய சபைக்கும் இடையில் இடம்பெற்ற தொடர்பாடல்கள் தொடர்பான அனைத்து ஆவணங்களின் பிரதிகளையும் கார்த்திகை **30**ஆம் நாளுக்கு முன்பாக நீதிமன்றில் ஒப்படைக்கும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டது.
இந்த வழக்கு அடுத்த ஆண்டு தை மாதம் **9**ஆம் நாள் விசாரிக்கபடும் என்று நீதிமன்றம் நாள் குறித்துள்ளது.

# மொழியால் இணைவார்களா தமிழர்கள்...?

நாகராசா



தமிழ்த் தேசியம் என்ற விடயம் தமிழ் மக்களின் மனங்களில் உரியவாறு கட்டி வளர்க்கப்படவில்லை. இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரும் பின்னரும் இவ்விடயம் உள்ளார்ந்தமாக அல்லாமலேயே வளர்க்கப்பட்டு வருகிறது. இந்த விடயத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் தமிழ்த் தலைவர்கள் தத்துவார்த்த ரீதியில் நடந்துகொள்ளவில்லை. இதனால் நாட்டுப்பற்றும், இனப்பற்றும், மொழிப்பற்றும் மக்களிடம் இல்லை. வடக்குக் கிழக்கு மக்களின் தேசியம் என்பதை ஏற்படுத்த தமிழ் மொழியை மட்டுமே மூலமாகக் கையாண்டிருந்தால் தற்போதுள்ள பிரிவினைகள் அல்லது ஒன்றுபடமுடியாத சூழல்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் மேட்டுக்குடி மக்களால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிங்களவர்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் ஒப்பீட்டளவில் குறைவு.

### தமிழ் மொழியே தமிழரின் அடையாளம்

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயக பூமி என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இலங்கைத் தமிழரின் முதலாவது கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸை ஜி.ஜி.பொன்னம்பலம் 1948 இல் உருவாக்கினார். இந்தக் கட்சி தமிழ்த் தேசியத்தை உரியவாறு கட்டமைக்கத் தவறிவிட்டது. இன்றுவரை மேட்டுக்குடித் தமிழரின் நாடாளுமன்ற அரசியலையே தாங்கி நிற்கிறது.

இந்தக் கட்சி தொடங்கப்பட்டு ஒரு வருடத்தில் அப்போதைய தலைமை அமைச்சர் டி.எஸ். சேனநாயக்காவுடன் சேர்ந்து மலையக மக்களை வெளியேற்றுவதற்கு ஜி.ஜி.பொன்னம்பலம் துணை நிற்கிறார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்த தந்தை செல்வா தான் தனியாகித் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கினார். தமிழில் தமிழ் அரசுக் கட்சி என்றாலும் ஆங்கிலத்தில் அதை பெரடல் பார்ட்டி என்று சிங்கள மக்கள் மத்தியில் கூறிச் கூட்டாட்சியை வலியுறுத்துவதாக அறிமுகப்படுத்தினார்.

தந்தை செல்வாவால் இறுதிவரையும் கூட்டாட்சியைப் பெற முடியவில்லை. மலையக மக்களின் வெளியேற்றத்தைத் தடுக்கவுமில்லை. இந்தியத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் தொப்புள்கொடி என்றும் வடக்கத்தையான், தோட்டக்காட்டான் என்றும் சொல்லி இருவேறு நிலைப்பாடுகளில் பகிரங்கமாகக் கூறுகின்றனர் இந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள். குறைந்தபட்சம் வடக்குக் கிழக்கில்கூட தமிழ்த் தேசியத்தை அவர்களால் கட்டி வளர்க்க முடியவில்லை. வடக்கு மக்கள், வன்னி மக்கள், கிழக்கு மக்கள் எனப் பருமட்டாக 3 பிரிவான மக்களின் பிரிதிநிதிகளாக நாடாளுமன்ற அரசியலில் ஈடுபடுகின்றனர்.

### அந்நியராட்சியில் வடக்குக் கிழக்கு மக்கள்

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிகளின்போது மேட்டுக்குடியினரில் ஒரு பகுதியினர் ஆட்சி மொழிகளைக் கற்று அரச ஊழியர்களாகவும் "வைற் கொலர்" பணியாளர்களாகவும் மாறினர். இவ்வாறு ஆட்சியாளர்களுடன் ஒட்டியிருந்த வர்க்கம் அப்புக்காத்து, புரோக்கிராசி, சட்டத்தரணிகள் என உருவாகி இன்றைக்கு நாடாளுமன்றம் செல்வதைப் பெருமையாகக் கருதுகின்றனர். தவிர தமிழ் மக்களின் தேவைகளையோ பிரச்சினைகளையோ கருத்தில் எடுக்கத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் தாங்கள் எவ்வாறு மீண்டும் மீண்டும் நாடாளுமன்றம் செல்வது என்பதில் கவனம் செலுத்துகின்றனர். போர்த்துக்கேய, ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலங்களில் தாம் பெற்றிருந்த மதிப்பைச் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்தும் இன்று இவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

### தமிழர்களுக்குள் பிரிவு

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை தமிழர்களுக்கிடையில் இருக்கும் பெரிய பிரிவினை சாதியாகும். 2020 பொதுத் தேர்தலில் நாடாளுமன்றம் சென்ற அனைவரும் மேட்டுக்குடி வர்க்கத்தினரே. இவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புகின்ற பெரும்பான்மையினர் இவர்களின் வர்க்கத்தைச் சேராதவர்கள் என்பது இங்கு முரண் நிலைக்குரியது.

# அலி சப்ரியின் 3 முகங்கள்



2019ஆம் ஆண்டில் கோட்டாபய ராஜக்சப அரசதலைவருக்கான தேர்தலில் போட்டியிட்டபோது, அமெரிக்காவிலும் இலங்கையிலுமாக இரட்டைக் குடியுரிமை உள்ளவர் என்பதால் அரசமைப்பின்படி அவர் அந்தத் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற சட்டப் பிரச்சினையை எதிர்த் தரப்பினர் கொண்டுவந்தார்கள். வழக்குத் தொடுக்கபட்டிருந்தது. அந்த வழக்குக் கான தீர்ப்பு வெளியாவதற்கு முதல்நாள் கூட, கோட் டாபயவைத் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு துரத்தியடிப் போம், அடுத்த அரசதலைவர் சஜித் பிரேமதாசதான் என்று எதிர்த்தரப்பினர் திட்டவட்டமாகக் கூறினார்கள். ஆனால், அலி சப்ரியினதும் றொமேஸ் டி சில்வாவினதும் வாதத் திறமைகளால் கோட்டாபய ராஜபக்ச எவ்வாறு தேர்தலில் போட்டியிடலாம் என்று நீதிபதிகள் குழாம் தீர்ப்பு வழங்கியது. அந்த வழக்கில் வென்றாதால் அலிசப்ரிக்கு நீதி அமைச்சர் பதவியும் றொமேஸ் டி சில்வாவுக்கு அரச தலைவரின் சட்ட ஆலோசகர் பதவியும் கோத்தாபய ராஜபக்சவால் பின்னர் வழங்கப்பட்டன.



நியூட்டன்

தற்போதைய நாடாளுமன்ற உறுப் பினர்களும் இவர்களுக்கு முன்பிருந்த வர்களாலும் சாதி, மதம், பிரதேசவா தம், கல்வி, உத்தியோகம், சொத்துகள் போன்ற விடயங்களை முன்னிறுத் தியே அரசியலை மேற்கொள்வதால் தமிழ்த் தேசியத்துக்கான கோட்பாட்டு ரீதியான முன்னெடுப்புகள் எட்டப்பட வில்லை. இதனால் தமிழ்த் தேசியத் துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடு படுகின்ற சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஏதோ ஒரு வகையில் சேவையாற்றுப வர்களாகவும் சலுகைகளைப் பெறுப வர்களாகவும், குறுகிய காலத்தில் பணக்காரர்களாக ஆகுபவர்களாகவும், சொத்துக்களை உருவாக்குபவர்களா வும், பெரும் முதலாளிகளாகவும் ஆக முடிகிறது.

**புலிகளின் தமிழத் தேசியம்**

புலிகளின் அரசியல் செயற்பாடுகள் நாடாளுமன்றம் செல்வதை நோக்க மாகக் கொண்டிருக்காததால் சாதி, மதம், பிரதேசவாதம், சொத்து, படிப்பு என் பவற்றைத் தாண்டியதாக இருந்தன. வடக்குக் கிழக்கு தாயக நிலம் சார்ந்த ஒரு பொதுக்கட்டமைப்பைப் புலிகள் பேணினர். இதை விரும்பாத மேட் டுக்குடி அரசியல் குடும்பங்கள் இல ங்கை அரசுடனும் இந்திய அரசுடனும் இணைந்து புலிகளை அழிக்க வேண்டும் என்பதில் தீவிரம் காட்டின. புலிகளின் சமூகம் சார் கட்டமைப்புகள் தமது அரசியலுக்கு எதிரானவை இப்படியே விட்டால் தமக்கு அரசியல் எதிர்காலம் இல்லாதுபோய்விடும் எனப் பயந்தார்கள். தற்போது ஒரு மண்டபத்தில் 50 பேரை வைத்து கூட்டம் நடத்த முடியாத அளவுக்குத் தமக்குள் முரண்பட்டிருக்கிறார்கள். இது மேட்டுக்குடி அரசியல்வாதிகளின் கபடத்தனமான அரசியலால் பெற் றுக்கொண்ட அசிங்கமான பண்பாடா கும்.

இவற்றைக் களைவதற்கு மொழி யால் இணையவேண்டும். மொழி வாரியான நேசிப்பும் அக்கறையும் சாதி, பிரதேசம், மதம் கடந்த பொதுத் தளத்தை உருவாக்குவதும் முக்கி யமானது. இதுவரை தமிழ்த் தேசியம் அணுகப்பட்ட விதம் தவறானது என் பதாலேயே தமிழர் மத்தியில் அள வுக்கதிகமான கட்சிகளும் அரசியல் முரண்பாடுகளும் பல்கிப் பெருகி யிருக்கின்றன. தமிழர்கள் தமக்குள் இணையாத வரை சிங்கள ஆட்சி யாளர்கள் எந்தவொரு பன்னாட்டு நிபந்தனைகளுக்கும் பயப்பட வேண் டிய அவசியமும் ஏற்படாது.

**அயலுறவு அமைச்சர் பதவி**

புலிகள் போராட்ட காலத்தில் அப்போதைய அரச தலைவர் சந்திரிகாவின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தவர் லக்ஷ்மன் கதிர்காமர். புலிகள் விடுதலைப் போராளிகள் அல்லர் பயங்கரவாதிகள் என்ற பரப்புரையை உலக அரங்கில் கதிர்காமர் செய்துவந்தார். புலிகளின் போராட்டத்தைக் கதிர்காமர் என்கிற ஒரு நபரை வைத்துச் சந்திரிகா கையாண்டார். புலிகள் பயங்கரவாதிகள் என்ற கதிர்காமரின் பரப்புரையை உலக நாடுகள் ஒரே நேரத்தில் ஏற்றுக்கொண்டதாக இல்லை. அதற்கு விடுதலைப் புலிகளின் மதியுரைஞனரான அன்ரன் பாலசிங்கம், அடெல் பாலசிங்கம் ஆகியோரின் மறுத்துரைப்புகள் காரணங்களாக இருந்தன. கதிர்காமர் கொல்லப்பட்டவுடன் கதிர்காமர் கூறிவந்த விடயங்கள் சரியானவை என்ற முடிவுக்கு ஐரோப்பிய நாடுகள் வந்தன. அதன் பின்னர் கதிர்காமரின் இடத்தை நீலன் திருச்செல்வம் நிரப்பினார். நீலன் திருச்செல்வத்தின் கொலை புலிகள் மீதான பயங்கரவாதிகள் பிம்பத்தை மேலும் உறுதிப்படுத்தியது.

தற்போது களமிறங்கியிருக்கும் அலி சப்ரி ஏறத்தாழ கதிர்காமரின் வகிபாகத்தையே ஏற்று வருகிறார். முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த இவர் தோற்றத்திலும் ஆங்கிலப் புலமையிலும் நாகரீகமான அரசியல் அணுகுமுறையிலும் கதிர்காமரை ஒத்தவராகக் காணப்படுகிறார். தற்போது நடந்து வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை முகங்கொடுக்கும் போர்க்குற்ற விசாரணை, உள்ளக விசாரணைகள், அரசியல் தீர்வு ஆகிய விடயங்களைக் கச்சிதமாகக் கையாண்டிருக்கிறார். தமிழர் தரப்பினர் ஐ.நா மனித அறிக்கையில் பிழை கண்டுபிடிக்கும் அளவுக்கு அரச தலைவர் ரணிலினதும் அலிசப்ரியினதும் செயற்பாடுகள் முன்னேற்றம் கண்டுள்ளன.

**அலிசப்ரியின் 3 முகம்**

சிங்களவரின் விடயத்தில் சிங்களத் தலைவர்போலும் தமிழர் விடயத்தில் கதிர்காமரைப்போலவும் முஸ்லிம்களின் விடயத்தில் ஜே.ஆரின் ஆட்சியில் அயலுறவு அமைச்சராக இருந்த ஏ.சி.எஸ் ஹமீத் போலவும் அலிசப்ரி செயற்படுகிறார். கொழும்பைப் பூர்வீகமாகக் கொண்டவர் என்பதால் வடக்குக் கிழக்கு முஸ்லிம் தலைவர்களுக்கு அவரது நடவடிக்கை பிரச்சினையாக இருக்கலாம்,. ஆனால், தேசிய அரசியலில் காத்திரமான பங்கை வகிக்கிறார். மும்மொழிப் புலமையுள்ள அலி சப்ரி தேசியப் பட்டியலில் நாடாளுமன்றம் சென்றவர். அதற்கு அவரிடமிருந்த ஒரே ஒரு பலம் அவரது சட்டத் திறமை மட்டுமே. இவரது அந்தத் திறமை அரசின் பக்கத்தில் செயற்படுத்தப்படுவதால் வடக்குக் கிழக்கு முஸ்லிம் தலைவர்களுக்கு மட்டுமல்லாது தமிழ்த் தேசியம் பேசும் தலைவர்களுக்கும் பிரச்சினையாக உள்ளது.

**முஸ்லிம் நாடுகளின் உதவி**

முன்னாள் அயலுலுறவு அமைச்சரான ஹமீத்தை ஜே.ஆர் தெரிவு செய்ததற்குக் காரணம் முஸ்லிம் நாடுகளுடனான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கே ஆகும். ஹமீத் கண்டி - அக்குறணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சந்திரிகாவும் கொழும்பு மைய நபரான கதிர்காமரைத் தெரிவு செய்தார். கொழும்பு மைய அரசியல் நபர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எப்போதும் இலங்கைத் தேசியத்துக்குச் சார்பானவர்களாக இருந்தார்களே தவிர தமிழ்த் தேசியத்துக்குச் சார்பானவர்களாகவோ முஸ்லிம் தேசியத்துக்குச் சார்பானவர்காகவோ இருந்ததில்லை. அலிசப்ரியும் அப்படியானவரே.

அவரது புதிய நகர்வுகளால் இலங்கையில் முஸ்லிம்கள் மீதான நெருக்கடிகள் மாற்றம் கண்டிருக்கின்றன. சஹ்ரானின் குண்டுவெடிப்புக்குப் பின்னர் தீவரம் பெற்றிருந்த இந்த நெருக்கடிகள் தற்போது நீர்த்துப்போயுள் ளன. தீவிர பௌத்தவாதியாகவும் முஸ்லிம் எதிர்ப்பாளராகும் செயற்பட்ட அத்தே ஞானசார தேரர் முஸ்லிம் நாடுகளுக்குச் சென்று அந்த நாட்டுத் தலைவர்களுடன் சுமூகமாக நடந்து கொள்ளும் நிலை அலிசப்ரியின் நகர்வுகளால் ஏற்பட்டிருப்பதே இதற்கான தக்க சான்று.

அலி சப்ரி தனது அயலுறவு அமைச்சர் பதவியை வைத்துக்கொண்டு முஸ்லிம் நாடுகளைக் கையாளும் தந்திரத்தை ஐ.நா மனித உரிமைக் கூட்டத் தொடரின் பின்னர் தொடங்கியிருக்கிறார். ஐ.நா. கூட்டத்தொடரின்போது பல்வேறு முஸ்லிம் நாட்டுத் தலைவர்களைச் சந்தித்திருக்கிறார். இலங்கைக்கு எதிரான வாக்கெடுப்பில் அந்தத் தலைவர்கள் இலங்கைக்குச் சார்பாக வாக்களிக்காவிட்டாலும் எதிராக வாக்களிக்காத நிலையைத் தோற்றுவித்திருக்கிறார். அலி சப்ரி குறுகிய காலத்தில் இவ்வாறு தனது 3 முகங்களைப் பிரதிபலித்திருக்கிறார்.



# "புலிகளின் தாக்குதல்கள் பலவற்றை முறியடித்தேன்..."

## முகம் காட்டாமல் பதிலளித்த மேஜர் ஷான்

**கமலநாதன்**

1987 காலப்பகுதியில் இலங்கை அரசின் காலாட் படையில் இணைந்து பயிற்சி பெற்று வடக்கின் பல பாகங்களிலும் புலனாய்வு வேலைகளில் ஈடுபட்டவர் மேஜர் ஷான். புலிகள் தாக்குதல்களை நடத்துவதற்கு முன்னரே அவற்றைக் கண்டுபிடித்து முறியடித்தார் என்றும் புலிகளின் தாக்குதல்கள் பலவற்றுக்கு எதிர்த் தாக்குதல்களைத் தொடுத்து முறியடித்தார் என்றும் அவர் தனது செவ்வியில் கூறுகிறார். இதற்கெல்லாம் தனக்கிருந்த தமிழ் பேசும் ஆற்றலே காரணமாக இருந்தது என்கிறார். இறுதிப் போர் வரை திரை மறைவிலிருந்து தகவல்களைச் சேகரித்த படைத்துறைப் புலனாய்வாளர்களில் மேஜர் ஷான் முக்கியமானவர். வெனச யூரியுப் தளத்துக்குச் செவ்வியளித்த அவர் தனது முகத்தைக் காட்டவில்லை. இப்போது செயலிழந்த நிலையில் சக்கர நாற்காலியில் காலத்தைக் கழித்து வருகிறார். அவர் வெனச யூரியுப் தளத்துக்கு வழங்கிய செவ்வி கீழ்வருமாறு.

**முல்லைத்தீவில் முதற் கடமை**

நான் காலாட் படையில் பயிற்சி பெற்ற பின்னர் 1987 இல் எனது முதற் பணியை முல்லைத்தீவில் மேற்கொண்டேன். அப்போது எமக்குப் பொறுப்பாக ஜெனரல் கொப்பேகடுவ இருந்தார். முல்லைத்தீவின் சி.ரி.பி சந்திக்கு அருகில் பாதையின் இருபுறமும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டோம். அதற்கு முன்னர் அந்தப் பகுதிக் கிராம அலுவலரை படை முகாமுக்கு வருமாறு செய்தி அனுப்பினோம். ஆனால் அவர் வரவில்லை. அவர் வராததால் எமக்குச் சந்தேகம் எழுந்தது. பின்னர் நாங்கள் கண்காணிப்பில் ஈடுபட்டோம். பாதையில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பாதையின் இருமருங்கையும் குப்பைவாரி மூலம் கிளறியவாறு உன்னிப்பாக அவதானித்தபடி சென்றுகொண்டிருந்தோம்.

மழை பெய்து, வெள்ளம் ஓடி, மணல் நிரம்பியவாறு ஓர் இடம் காணப்பட்டது. நான் அந்த மணலைக் குப்பை வாரியால் கிளறிப்பார்த்தேன். அப்போது நாம் நின்ற இடத்துக்கு அருகில் பெரிய சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது. உடனே நான் தூக்கி வீசப்பட்டேன். மணல், குப்பை போன்றவற்றால் மூடப்பட்டுவிட்டேன். குண்டு வெடித்த இடத்துக்கு அருகில் நான் நின்றதால், நான் இறந்துவிட்டேன் என்று படைத் தலைமையகத்துக்குத் தகவல் அனுப்பப்பட்டுவிட்டது. பின்னர் காயப்பட்டு உயிருடன் இருப்பதாகத் தகவல் அனுப்பட்டது என்று அறிந்தேன்.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னர் எனது காதுகள் கேட்கும் திறனை இழந்தன. காதுகளுக்குள் மணல் அடைத்துக் கிடந்தது. அதிஷ்டவசமாக உடலில் எந்தக் காயமும் ஏற்படவில்லை. ஆமர் ட்ராங் ஒன்றை இலக்கு வைத்துப் புலிகள் நிலக்கண்ணிவெடியைப் புதைத்திருக்கவேண்டும். நாங்கள் சுற்றுக்காவல் பணியின்போது அதை எடுத்து விடுவோம் என்பதால் வெடிக்க வைத்திருந்தார்கள்.

காது கேட்காதுபோனமைக்காக மருத்துவமனையில்




சேர்க்கப்பட்டேன். ஆனாலும் சிகிச்சை பயனளிக்கவில்லை. காதுகளின் கேட்கும் திறன் குறைந்துவிட்டது.

**படைத் தொடரணி வாகனம் மீது தாக்குதல்**

அனுராதபுரத்திலிருந்து முல்லைத்தீவு முகாமுக்குச் செல்வதற்கு இரண்டு வழிகள் இருந்தன. ஒன்று அனுராதபுர வான் படைத்தளத்திலுள்ள மதன் தளத்திலிருந்து உலங்கு வானூர்தியில் முல்லைத்தீவுக்குச் செல்வது. மற்றையது கொன்வே எனப்படும் படைத் தொடரணி வாகனத்தில் செல்வது. அந்த வாகனங்களில் அரிசி, பருப்பு, மா, கருவாடு, தேங்காய், எண்ணெய் வகைகள் என முல்லைத்தீவு முகாமுக்குத் தேவையான எல்லாவற்றையும் எடுத்துச் செல்வது வழக்கம்.

அனுராதபுரத்திலிருந்து சென்ற படைத் தொடரணி வாகனம் மீது புலிகள் குண்டுத்தாக்குதல் ஒன்றைச் செய்தார்கள். அப்போது ஸ்கவுட், சரசன் ஆகிய இரண்டு வகைப் படை வாகனங்களே இருந்தன. இரண்டு உலங்கு வானூர்திகளும் இருந்தன. குண்டு வெடித்ததும் புலிகள் மறைந்திருந்து துப்பாக்கியால் சுட்டார்கள். இந்தக் குண்டு வெடிப்பின் பின் எனது காதுகள் மிகத் தெளிவாகக் கேட்கத் தொடங்கின. ஒரு குண்டு வெடிப்பில் இழந்த செவிப்புலன் இன்னோர் குண்டு வெடிப்பின்போது சீரானது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

**தமிழீழக் கோரிக்கையை இல்லாது செய்வது**

புலிகளின் தமிழீழம் என்ற கோரிக்கையை இல்லாது ஒழிப்பதற்குப் படைப் புலனாய்வுத் துறை ஒன்றைக் கட்டி வளர்க்க வேண்டிய தேவை இலங்கைப் படையினருக்கு இருந்தது. 1988, 89 காலப்பகுதியில் படைப் புலனாய்வுத்துறை என்ற அமைப்போ, பிரிவொன்றோ இருக்கவில்லை. முதன் முலாக ஜெனரல் பலகல்ல தலைமையில் புலனாய்வுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுச் சாலியபுர படை முகாமில் பயிற்சி அளிக்கப்பட்டது. அந்த முதலாவது அணியில் சேர்ந்தவர்களில் நானும் ஒருவன். (தொடரும்)

---

# சீன அதிபரைச் சுற்றிவரும் வதந்தி

மு.இராமநாதன்



தமிழ் மொழியின் சங்கப் பாடல்களின் தொகுப்பைப் போன்றது சீன மொழியின் 'ஷிழ் சிங்' (Shi Jing). அது பழம் பாடல்களின் தொகை நூல். அதில் ஒரு பாடலில் பழி கூறும் நிந்தனையாளர்கள் பரிகசிக்கப்படுவார்கள். அவர்களுக்குச் சாணி வண்டுகள் உவமையாகக் கூறப்படும். ஏனெனில், சாணி வண்டுகள் எங்கும் நுழைய முயல்வன. சூரிய ஒளி படாத இடங்கள் அவற்றுக்கு உகந்தவை.

சென்ற வாரம் சீனாவைப் பற்றியும் சீன அதிபர் ஜி ஜின்பிங்கைப் பற்றியும் ஒரு வதந்தி சமூக ஊடகங்களில் தீயாகப் பரவியது. சீனா அந்த வதந்தியைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அதன் வெளியுறவு அமைச்சகம் யாதொரு மறுப்பையும் வெளியிடவில்லை. ஒருவேளை அப்படி ஒரு மறுப்பு வெளியாகி இருந்தால், அதில் ஷிழ் சிங் பாடல் மேற்கோள் காட்டப்பட்டிருக்கக்கூடும். ஏனெனில், வதந்தியாளர்கள் ஆதாரங்களுக்கு அவசியமில்லாத இணைய வெளியின் கதகதப்பில் தங்கள் பரப்புரையை

**வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட அதிபர், நாடு திரும்பியதும் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டிருக்கலாம். தவிர, சீனாவின் மூத்த அரசியலர்கள் நாட்கணக்கில் ஊடக வெளிச்சத்திலிருந்து ஒதுங்கியிருப்பது இது முதல் முறை அல்ல**

நிகழ்த்தினார்கள், சாணி வண்டுகளைப் போல்.

**வதந்தி என்ன?**

சீனாவின் ஆட்சிக்கட்டிலை படைத் தலைமை கைப் பற்றிக்கொண்டது. சீன அதிபர் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டிருக்கிறார். இதுதான் வதந்தி. இவ்வாண்டு ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு உஸ்பெகிஸ்தானில் நடந்தது. உலகத் தலைவர்கள் பலர் கலந்துகொண்டனர். கொரோனாவால் போக்கும் வரவும் முடங்கிய பிறகு, சீன அதிபர் மேற் கொண்ட முதல் வெளிநாட்டுப் பயணம் இது. மாநாட்டை முடித்துக்கொண்டு புரட்டாதி (செப்டம்பர்) 17 அன்று நாடு திரும்பினார் அவர். பிறகு அவர் பொது நிகழ்வில் கலந்துகொண்டது புரட்டாதி 27 அன்று.

இடைப்பட்ட பத்து நாட்களில் அவரைப் பொது நிகழ் வுகளில் காணக்கூடவில்லை. சாணி வண்டுகளுக்கு அந்த இடைவெளி போதுமானதாக இருந்தது. துருப்புகள் பாசறையிலிருந்து வெளியேறி தலைநகர் பெய்ஜிங்கில் சுற்றுக்காவல் வருவதாக ஒருவர் எழுதினார். இன்னொருவர் 6,000 பயணி வானூர்திகள் பயணங்களைக் கைவிட்டதாக எழுதினார். இன்னார்தான் அடுத்த அதிபர் என்று வேறொ ருவர் எழுதினார்.

**என்ன நடந்திருக்கும்?**

சீனா மிகக் கடுமையான கொவிட் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றிவருகிறது. கொவிட்- சுழியம் (Zero Covid) என்பது அந்தக் கொள்கையின் பெயர். கொவிட் டால் பாதிக்கப்பட்ட பல பெருநகரங்கள் முற்று முழுதாக அடைக்கப்பட்ட தும், அதனால் சீனாவின் உற்பத்தியும் விநியோக மும் பெருமளவில் பாதிக் கப்பட்டதும், கடந்த ஈராண்டுகளில் பல முறை நிகழ்ந்தன. அந்தக் கொள் கையின் அடிப்படையில், வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட அதிபர், நாடு திரும்பியதும் தன் னைத் தனிமைப்படுத்திக் கொண்டிருக்கலாம். தவிர, சீனாவின் மூத்த அரசியலர் கள் நாட்கணக்கில் ஊடக வெளிச்சத்திலிருந்து ஒதுங் கியிருப்பது இது முதல் முறை அல்ல.

**வரலாறு முக்கியம்**


இந்த வதந்தியைக் குறித்து இணைய வெளியிலும் அச்சு ஊட கங்களிலும் செய்திக் கட்டுரைகள் வெளியா கின. ‘இப்படி நடந்திருக்கக் கூடாதா?’ என்று விரும்பியவர்கள், ட்விட்டரில் அவர் சொன் னார், இன்ஸ்டாகிராமில் இவர் சொன்னார், முகநூலில் உவர் சொன்னார், என்கிற ரீதி யில் எழுதினார்கள். ‘இப்படி நடந்திருக்க முடியாது’ என்று கருதியவர்கள் இந்த வதந்திகள் நம்பத்தகுந்தவை அல்ல என்று எழுதினார்கள். சீனாவின் இரும்புத்திரைதான் இப்படியான வதந்திகளுக்கு இடமளிக்கிறது என்றார்கள். இரு சாரரும், நான் படித்த வரையில், ஒரு முக்கியமான கண்ணியைக் கவனத்தில் கொள்ளவில்லை. அது சீனாவின் வரலாறு. அதைத் திரும் பிப் பார்த்தால்தான் இப்படி ஒரு சம்பவம் ஏன் சீனாவில் நடக்க முடியாது என்று புரிந்துகொள்ள முடியும்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி 1921 ஆடி (ஜூலை) முதல் நாள் நிறுவப்பட்டது. அப்போது ஆட்சியிலிருந்த கோமிங் டாங் கட்சியைத் தீவிரமாக எதிர்த்தது. அதற்கு ஆயுதம் தாங்கிய புரட்சி அவசியம் என்று கருதிய கம்யூனிஸ்ட் கட்சி, தனக்கான படையைக் கட்டியது. 1927 ஆவணி (ஆக ஸ்ட்) முதல் நாள் மக்கள் விடுதலைப் படை உதயமானது. இந்தப் படை ஜப்பானியப் படைகளோடும் கோமிங்டாங் கின் அரச படைகளோடும் அடுத்தடுத்து மோதியது. இறுதியில் வென்றது. 1949 ஐப்பசி (அக்டோபர்) 1 அன்று கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி அமைக்கப்பட்டது. இந்த வரலாற்று வரிசை முக்கியமானது.

அதாவது, 1921இல் கட்சி உருவானது. 1927இல் படை கள் கட்டப்பட்டன. 1949இல் ஆட்சி வசமாகியது. சீனா வில் ஆட்சியைவிட படைக்கும், படையைவிட கட்சிக் கும் முக்கியத்துவம் உண்டு. ஜி ஜின்பிங் மூன்று பதவி களை வகிக்கிறார். அவர்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர், படைகளின் தலைவர், மக்கள் சீனக் குடியரசின் அதிபர். சீனக் கட்டமைப்பில் கட்சிச் செயலர் தான் அதிபரைக் காட்டிலும், படைத் தலைவரைக் காட்டி லும் அதிகாரம் உள்ளவர். கட்சியின் பொதுச் செயலரை படைத் தளபதிகளால் சிறைப்பிடித்துவிட முடியாது.



# ஒரு பொருளாதார அடியாளின் வாக்குமூலம்



ஜான் பெர்க்கின்ஸ்

சர்வதேச பொருளாதாரம், அதன் இயங்குமுறை தொடர்பில் ஜான் பெர்க்கின்ஸ் எழுதிய 'ஒரு பொருளாதார அடியாளின் கூடுதல் வாக்குமூலம்' உலகளாவிய அளவில் வாசகர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நூல்களில் ஒன்று. முப்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல் இது. தமிழில் ஏற்கெனவே இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும், இப்போது அதிகாரபூர்வ மொழிபெயர்ப்பை 'மஞ்சுள் பதிப்பகம்' வெளியிட்டிருக்கிறது. பி.எஸ்.வி.குமாரசாமியின் மொழிபெயர்ப்பில் வெளியாகியிருக்கும் இந்நூல் வாசிப்புக்கு எளியதாகவும், நூல் வடிவில் விரிவாக்கப்பட்டதாகவும் அமைந்திருப்பது இதன் சிறப்பு.

ஜான் பெர்க்கின்ஸ் உலக வங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற பெரிய அமைப்புகளுக்குப் பொருளாதார ஆலோசகராகச் செயல்பட்டவர். சர்வதேச அளவில் இயங்கிவரும்

**புவியியல்**

இந்த இடத்தில் படைகள் ஆட்சிபுரிந்த நாடுகளை ஒப்பிட்டுப் பார்ப்பது பயன் தரும். பல ஆசிய நாடுகள் படைத்துறை நுகத்தடியின் கீழ் பாரம் இழுத்திருக்கின்றன. பாகிஸ்தான், வங்கதேசம், இந்தோனேசியா, தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா, சிரியா முதலான ஆசிய நாடுகள் எண்பதுகளுக்குப் பின்னாலும் படைத்துறை ஆட்சியின் கீழ் இருந்தவை. இப்போது படைத்துறை ஆட்சி நடக்கும் ஒரே ஆசிய நாடு மியன்மார். ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலும் பல நாடுகள் படைத்துறை ஆட்சியின் கீழ் இருந்தவை. சூடான், மாலி, கெனீவா முதலிய ஆப்பிரிக்க நாடுகளில் இப்போதும் படைகள்தான் கோலோச்சுகின்றன. இந்த நாடுகளில் எல்லாம் ஆட்சி -அதிகாரமும் படைத்துறையும் தனித்தனியாக இயங்குபவை. படைகளால் ஆயுத பலத்தைப் பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்ற முடிந்ததும் அதனால்தான். சீனாவில் இது சாத்தியமில்லை. காரணங்கள் வேறு.

சீனாவில் நடப்பது ஒரு கட்சி ஆட்சி. அங்கே கட்சியும், படைகளும், ஆட்சியும் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கின்றன. அவற்றின் படிநிலைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இரண்டாவது இடத்தில் இருக்கும் படைத்துறை, முதல் இடத்தில் இருக்கும் கட்சிக்கு எதிராக, மூன்றாம் இடத்தில் இருக்கும் ஆட்சியைக் கைப்பற்றாது.

**எதிர்காலம்**

**ஜி ஜின்பிங்கைச் சுற்றி ஏன் இத்தனை வதந்திகள்?**

ஐப்பசி மாதம் 16ஆம் நாளன்று சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்குழு அல்லது பேராயத்தின் (காங்கிரஸ்) கூட்டம் நடைபெற இருக்கிறது. நாடெங்கிலுமிருந்து 2,300 உறுப்பினர்கள் பங்கெடுப்பார்கள். இவர்கள் கட்சியின் செயற்குழு அல்லது பொலிட்பீரோவிற்கு 200 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். முக்கியமாக, அடுத்த பொதுச் செயலரையும் அதிபரையும் தேர்ந்தெடுப்பார்கள். இந்தப் பதவிகளுக்கு மீண்டும் ஜி ஜின்பிங் தேர்ந்தெடுக்கப்படுவார். அதற்கான கிரணங்கள் தெளிவாகத் தெரிகின்றன. இதற்காகப் பல ஆண்டுகளாக அவர் காய்களை நகர்த்தி வருகிறார்.

ஜி ஜின்பிங் மூன்றாவது முறையாக அதிபராகப் போகிறார். மா சேதுங்கின் காலத்திற்குப் பிறகு, ஒருவர் இரண்டு முறைதான் அதிபராக முடியும். அப்படித்தான் சீனாவின் அரசமைப்புச் சட்டம் இருந்தது. ஜியாங் ஜெமின் 1993 முதல் 2003 வரையும், ஹூ ஜின்டாவ் 2003 முதல் 2013 வரையும் பதவி வகித்தார்கள். ஜி ஜின்பிங் 2013இலும், மீண்டும் 2018இலும் தெரிவானார். அவரது பதவிக்காலம் 2023இல் முடியும். முந்தைய சட்டத்தின்படி அவரால் 2023க்குப் பிறகு பதவி வகிக்க முடியாது. ஆனால், அந்தச் சட்டம் ஏற்கனவே திருத்தப்பட்டுவிட்டது. ஜி ஜிங்பிங்கின் அகவை 69. அவர் நான்காவது முறைகூட அதிபராகலாம். கண்ணுக்கெட்டிய தொலைவில் அவருக்கு கட்சியில் எதிரிகள் இல்லை.

சீன அதிபரைப் பற்றிய வதந்தி, இந்திய இணைய வெளியில்தான் அதிகமும் சுற்றில் இருந்தது. அது அந்த வதந்தியைப் பரப்பியவர்களின் விருப்பமாக இருக்கலாம். ஆனால், சாணி வண்டுகளால் நிலத்திற்கு மேல் பறக்க முடியாது. வதந்திகளைப் பரப்புவதால் பிரச்சினைகளை நேரிட முடியாது.

முன்னணிப் பெருநிறுவங்களில் தலைமைப் பொருளாதார நிர்வாகியாகவும் பணியாற்றியவர். சர்வதேச அளவில் இவரது எழுத்துகள் மட்டுமின்றி, உரைகளுக்கும் வரவேற்பு அதிகம். நம்முடைய அரசியலையும் பொருளாதாரத்தையும் சர்வதேச அமைப்புகள் எப்படித் தீர்மானிக்கின்றன என்பதை விவரிக்கும் நூல் இது. முக்கியத்துவம் கருதி நூலில் இருந்து ஒரு பகுதியை 'அருஞ்சொல்' தன் வாசகர்களுக்காக இங்கே தருகிறது.

பெருநிறுவனங்களின் ஆலோசனையாளர்கள் என்ற பதவிக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு, உலகெங்குமுள்ள பல நாடுகளைத் திட்டமிட்ட முறையில் நயவஞ்சகமாக ஏமாற்றிப் பல்லாயிரக்கணக்கான கோடி டாலர்களைச் சூறையாடுகின்ற தொழில்முறை நபர்கள்தாம் பொருளாதார அடியாட்கள்.

உலக வங்கி, சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க நிதியுதவி நிறுவனம், பிற சர்வதேச நிதியுதவி நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து பில்லியன் கணக்கான டாலர்களை மடை மாற்றி, பெருநிறுவனங்களின் பாக்கெட்டுகளையும், இப்புவியின் இயற்கை வளங்களைத் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற ஒரு சில செல்வந்தர்களின் பாக்கெட்டுகளையும் நிரப்புவதே அவர்களுடைய தலையாய பணியாகும்.

பொருளாதார அறிக்கைகளில் தில்லுமுல்லு செய்வது, ஜனநாயகத் தேர்தல்களில் தில்லுமுல்லு செய்வது, லஞ்சம் கொடுப்பது, மிரட்டுவது, பெண்களைப் போகப் பொருட்களாகப் பயன்படுத்திக் காரியம் சாதிப்பது, இவ்வளவு ஏன், கொலைகூடச் செய்வது இவர்கள் சர்வசாதாரணமாகப் பயன்படுத்துகின்ற உத்திகளாகும். வரலாறு நெடுகிலும் பேரரசுகள் கடைபிடித்து வந்த போக்கைத்தான் இவர்களும் பயன்படுத்துகின்றனர் என்றாலும், உலகமயமாக்கம் நடந்து கொண்டிருக்கின்ற இக்காலகட்டத்தில், அந்த உத்திகள் புதிய, பயங்கரமான பரிமாணங்களை எடுத்துள்ளன.

இது எனக்கு எப்படித் தெரியும் என்று கேட்கிறீர்களா? ஏனெனில், ஒரு சமயத்தில் நானும் ஒரு பொருளாதார அடியாளாக இருந்தவன்தான்.

1982இல் 'ஒரு பொருளாதார அடியாளின் மனசாட்சி' என்ற தலைப்பில் நான் ஒரு புத்தகத்தை எழுதத் தொடங்கினேன். மேற்குறிப்பிடப்பட்ட பத்தியுடன்தான் அதை நான் தொடங்கினேன். இரண்டு நாடுகளின் தலைவர்களுக்கு அப்புத்தகத்தை நான் அர்ப்பணித்திருந்தேன். எக்குவடோர் நாட்டு அதிபர் ஜெயிம் ரோல்டோஸும் பனாமா நாட்டு அதிபர் ஓமர் டோரிஜோஸும்தான் அவர்கள் இருவரும். நான் பெரிதும் மதித்தத் தலைவர்கள் அவர்கள்.

ஒரு பொருளாதார அடியாள் என்ற முறையில் தொழில்முறைரீதியாக நான் அவர்கள் இருவருடனும் பழகி வந்தேன். அவர்கள் இருவருமே தனித்தனியே ஒரு கொடூரமான விமான விபத்தில்தான் உயிரிழந்தனர். அவர்கள் இருவருடைய மரணங்களும் விபத்துகள் அல்ல. அவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். உலகளாவிய பேரரசு ஒன்றை நிறுவுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த பெருநிறுவன, அரசாங்க மற்றும் சர்வதேச வங்கிகளின் தலைவர்களின் கூட்டணியை அவர்கள் எதிர்த்ததுதான் அவர்கள் கொல்லப்பட்டதற்குக் காரணம். அவர்கள் இருவரையும் எங்களுடைய வழிக்குக் கொண்டுவருவதற்கு, பொருளாதார அடியாட்களாகிய நாங்கள் தவறியிருந்ததால், அமெரிக்க சிஐஏ அமைப்பின் ஆசி பெற்று இயங்கிவந்த, 'ஜாக்கல்கள்' என்ற வேறு விதமான அடியாட்கள் களத்தில் இறங்கிக் காரியத்தை முடித்தனர்.

நான் எழுதத் தொடங்கிய புத்தகத்தைக் கைவிடும்படி நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். அடுத்த இருபது ஆண்டுகளில் இதை மீண்டும் எழுத நான் நான்கு முறை முயன்றேன். உலகத்தில் நடைபெற்ற சில சம்பவங்களே ஒவ்வொரு முறையும் என்னை எழுதத் தூண்டின. 1989இல் பனாமா நாட்டுக்குள் அமெரிக்கப் படையினர் புகுந்த சம்பவம், முதல் வளைகுடாப் போர், சோமாலியாவில் நடைபெற்றச் சம்பவங்கள், ஒசாமா பின் லேடனின் வளர்ச்சி ஆகியவையே அவை. ஆனால், ஒவ்வொரு முறையும், லஞ்சமும் அச்சுறுத்தலும் மேலே தொடரவிடாமல் என் கைகளைக் கட்டிப்போட்டன.

**நான் எழுதத் தொடங்கிய புத்தகத்தைக் கைவிடும்படி நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். அடுத்த இருபது ஆண்டுகளில் இதை மீண்டும் எழுத நான் நான்கு முறை முயன்றேன். உலகத்தில் நடைபெற்ற சில சம்பவங்களே ஒவ்வொரு முறையும் என்னை எழுதத் தூண்டின.**

2003இல் ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்குச் சொந்தமாக இருந்த ஒரு பிரபலமான பதிப்பகத்தின் தலைவர், 'ஒரு பொருளாதார அடியாளின் கூடுதல் வாக்குமூலம்' நூலின் கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்த்தார். அதை அவர், 'இந்த உலகிற்குக் கண்டிப்பாகச் சொல்லப்பட வேண்டிய ஒரு விறுவிறுப்பான கதை' என்று வர்ணித்தார். ஆனால், தன்னுடைய நிறுவனத்தின் சர்வதேசத் தலைமையகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள், தான் அதைப் பதிப்பிப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்கக்கூடும் என்பதால் தன்னால் அதைப் பிரசுரிக்க முடியாது என்று வருத்தத்துடன் என்னிடம் கூறினார். அதை ஒரு புனைகதையாக எழுதும்படி எனக்கு அவர் அறிவுறுத்தினார். நான் அதற்கு ஒப்புக்கொண்டால், 'ஜான் லே கேர் அல்லது கிரஹாம் கிரீன் போன்ற ஓர் எழுத்தாளராக உங்களை என்னால் சந்தைப்படுத்த முடியும்' என்று அவர் கூறினார்.

ஆனால், இது ஒரு புனைகதையல்லவே! இது என் வாழ்க்கையின் உண்மைக் கதை. நமக்குத் தோல்விகளைக் கொண்டுவந்து கொடுத்த ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டக் கதை இது. எந்தவொரு பன்னாட்டு நிறுவனத்திற்கும் சொந்தமாக இல்லாத, ஒரு துணிகரமான பதிப்பாளர் இதை வெளியிட முன்வந்தார்.

லஞ்சங்களை ஒதுக்கித் தள்ளவும் அச்சுறுத்தல்களை அலட்சியம் செய்யவும் இறுதியில் எது என்னைத் தூண்டியது?

இதற்கான சுருக்கமான பதில், என்னுடைய ஒரே மகள் ஜெஸிக்கா!

அவள் அப்போதுதான் தன்னுடைய பட்டப்படிப்பை

முடித்துவிட்டு வெளியுலகிற்குள் அடியெடுத்து வைத்திருந்தாள். நான் இந்நூலைப் பிரசுரிக்க உத்தேசித்துக் கொண்டிருந்ததாகவும், ஆனால் அது குறித்து நான் அச்சம் கொண்டிருந்ததாகவும் நான் அவளிடம் தெரிவித்தபோது, அதற்கு அவள், 'கவலைப்படாதீர்கள் அப்பா! அவர்களால் உங்களுக்கு ஏதாவது நேர்ந்தால், நீங்கள் விட்ட இடத்திலிருந்து நான் அதைத் தொடர்கிறேன். என்றாவது ஒரு நாள் உங்களுக்கு நான் பெற்றுத் தரத் திட்டமிட்டிருக்கின்ற பேரக்குழந்தைகளுக்காகவாவது நாம் இதைச் செய்தாக வேண்டும்' என்று கூறினாள்.

என் முடிவுக்கான நீண்ட பதில் இது: என்னை வளர்த்த என் தாய்நாட்டின் மீது நான் கொண்டிருந்த அர்ப்பணிப்பு அமெரிக்காவை நிறுவிய மாமனிதர்கள் வெளிப்படுத்தியிருந்த உன்னத லட்சியங்கள் மீது நான் கொண்டிருந்த ஈடுபாடு அனைத்து இடங்களிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் 'வாழ்க்கை, சுதந்திரம், மகிழ்ச்சிக்கான நாட்டம்' ஆகியவற்றுக்கு வாக்குறுதி அளித்த அமெரிக்க ஜனநாயகத்தின் மீது நான் வைத்திருந்த ஆழமான நம்பிக்கை; **2001** செப்டம்பர் **11** நிகழ்வுக்குப் பிறகு, அமெரிக்காவை ஓர் உலகப் பேரரசாக மாற்றப் பொருளாதார அடியாட்கள் முயன்றுகொண்டிருந்ததைப் பொறுத்துக்கொண்டு வெறுமனே வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்பதில் நான் கொண்டிருந்த உறுதி.

நான் இக்கதையை உலகிற்கு எடுத்துச் சொல்லியதற்காக நான் ஏன் கொல்லப்படவில்லை என்ற சந்தேகம் உங்களுக்கு எழலாம். இப்புத்தகமே ஒரு விதத்தில் என்னுடைய காப்பீடாக அமைந்துவிட்டது. இதைப் பற்றி விரிவாக இனி வரும் அத்தியாயங்களில் நான் எழுதியுள்ளேன்.

இது ஓர் உண்மைக் கதை. இதன் ஒவ்வொரு நிமிடத்தையும் நான் வாழ்ந்துள்ளேன். இதில் நான் விவரித்துள்ள காட்சிகள், மக்கள், உரையாடல்கள், உணர்வுகள் ஆகிய அனைத்துமே என் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவையாகும். இது என்னுடைய தனிப்பட்ட கதையாக இருந்தாலும், நம்முடைய வரலாற்றைச் செதுக்கியுள்ள, இன்று நாம் இருக்கின்ற நிலைக்கு நம்மை இழுத்து வந்துள்ள, நம்முடைய குழந்தைகளின் வருங்காலத்திற்கு அடித்தளமாக அமைந்துள்ள உலக நிகழ்வுகளின் ஊடாக நிகழ்ந்த கதை இது. இந்த அனுபவங்களையும் மக்களையும் உரையாடல்களையும் துல்லியமாகச் சித்தரிக்க என்னால் முடிந்த அளவு நான் முயற்சித்துள்ளேன்.

வரலாற்று நிகழ்வுகளை நான் விவரிக்கின்றபோதும், மற்றவர்களுடனான என்னுடைய உரையாடல்களை நான் மறுஉருவாக்கம் செய்கின்றபோதும், நான் பலவற்றின் உதவியுடன் அவற்றை மேற்கொள்கிறேன். ஏற்கனவே பிரசுரமாகியுள்ள ஆவணங்கள் என்னுடைய தனிப்பட்டக் குறிப்புகள் மற்றும் ஆவணங்கள் என்னுடைய மற்றும் பிறருடைய மலரும் நினைவுகளில் உதித்தவை; முன்பு நான் எழுதத் தொடங்கி, பிறகு பாதியில் கைவிட்ட முந்தைய ஐந்து கையெழுத்துப் பிரதிகள் பிற நூலாசிரியர்களின் வரலாற்றுப் பதிவுகள் - குறிப்பாக, முன்பு ரகசியமாக வைக்கப்பட்டு, காலக்கெடு முடிந்த பிறகு சமீபத்தில் வெளியிடப்பட்ட தகவல்கள். சில இடங்களில், நான் ஒருவருடன் பல்வேறு சமயங்களில் நிகழ்த்திய உரையாடல்களை, இந்நூலின் நடையோட்டத்திற்கு ஏதுவாக ஒரே உரையாடலாக இணைத்து வழங்கியிருக்கிறேன்.



நாங்கள் உண்மையிலேயே எங்களைப் பொருளாதார அடியாட்கள் என்று அழைத்துக்கொண்டோமா என்று என்னுடைய பதிப்பாளர் என்னிடம் கேட்டார். 'ஆம், நாங்கள் எங்களை அப்படித்தான் அழைத்துக் கொண்டோம்' என்று நான் அவரிடம் உறுதி கூறினேன். இன்னும் சொல்லப்போனால், **1971**இல் நான் வேலையில் சேர்ந்தபோது, என்னுடைய பயிற்றுவிப்பாளராக இருந்த கிளாடின், என்னிடம், 'உங்களை ஒரு பொருளாதார அடியாளாக உருவாக்குவதுதான் என்னுடைய வேலை. இதுபற்றி உங்களுடைய மனைவி உட்பட யாரிடமும் நீங்கள் மூச்சு விடக்கூடாது' என்று கூறிவிட்டு, இன்னும் தீவிரமான ஒரு குரலில், 'நீங்கள் இதற்குள் வந்துவிட்டால், உங்களுடைய வாழ்நாள் முழுவதும் நீங்கள் இதற்குள்தான் இருக்க வேண்டும்' என்று கூறினார்.

என்னிடமிருந்து என்னவெல்லாம் எதிர்பார்க்கப்படும் என்பது குறித்து கிளாடின் ஒளிவுமறைவின்றிக் கூறினார். என்னுடைய வேலையை அவர் என்னிடம் இவ்வாறு விவரித்தார்: 'அமெரிக்க வர்த்தக நலன்களைத் தூக்கிப் பிடிக்கின்ற, ஒரு பரந்துபட்ட பின்னலமைப்பின் ஒரு பகுதியாக ஆகும்படி உலகத் தலைவர்களை நீங்கள் ஊக்குவிக்க வேண்டும். இறுதியில் அத்தலைவர்கள், பெரும் கடன் எனும் வலைக்குள், என்றென்றும் மீள முடியாத விதத்தில் மாட்டிக் கொள்வர். அது அவர்களுடைய விசுவாசத்தை உறுதி செய்யும். நாம் விரும்புகின்றபோதெல்லாம், நம்முடைய அரசியல், பொருளாதார, மற்றும் ராணுவத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நம்மால் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதற்குப் பதிலீடாக, அவர்கள் தங்களுடைய மக்களுக்கு, தொழிற்பேட்டைகள், மின் திட்டங்கள், விமான நிலையங்கள் போன்றவற்றை வழங்கி, நாட்டுத் தலைவர்கள் என்ற முறையில் தங்களுடைய நிலையை அவர்களால் வலுப்படுத்திக்கொள்ள முடியும். இதன் விளைவாக, அமெரிக்கப் பொறியியல் மற்றும் கட்டுமான நிறுவனங்களின் முதலாளிகள் கொழிப்பர்.'

இதில் நாங்கள் தோல்வியுற்றால், பொருளாதார அடியாட்களாகிய எங்களைவிட அதிக பயங்கரமான அடியாட்களாகிய 'ஜாக்கல்கள்' களத்தில் இறக்கிவிடப்படுவர். அவர்களும் தங்களுடைய முயற்சியில் தோல்வியுற்றால், இறுதியில் அந்த வேலை படைகளின் தலையில் விழும்.

இந்நூலின் முதல் வடிவம் வெளிவந்து கிட்டத்தட்டப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆன பிறகு, ஒரு புதிய பதிப்பிற்கான தேவை வந்துவிட்டி

ருந்ததை நானும் என் பதிப்பாளரும் உணர்ந்தோம். முதற் பதிப்பு என் வாழ்வில் எத்தகைய தாக்கம் ஏற்படுத்தியிருந் தது என்பதையும், என்னை மீட்டெடுப்பதற்கும் பொரு ளாதார அடியாள் அமைப்புமுறையை மாற்றுவதற்கும் நான் என்ன செய்துகொண்டிருந்தேன் என்பதையும், விஷயங்களை மாற்றுவதற்குத் தங்களால் எத்தகைய நட வடிக்கைகளில் ஈடுபட முடியும் என்பதையும் தெரிந்து கொள்ள தாங்கள் ஆவலோடு இருந்ததாக, ஆயிரக்கணக் கான வாசகர்கள், கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல்கள் மூல மாக எனக்குத் தெரிவித்தனர். இப்புதிய பதிப்பு அவர்க ளுடைய கேள்விகளுக்கான என்னுடைய பதிலாகும்.

அதோடு, இப்போது உலகம் முற்றிலும் மாறியிருப் பதால், ஒரு புதிய பதிப்பை வெளியிடுவதற்கான நேரம் வந்துவிட்டதாக நான் உணர்ந்தேன். பெருமளவுக்கு, கடன் மற்றும் பயத்தின் அடிப்படையில் அமைந்திருந்த பொரு ளாதார அடியாள் அமைப்புமுறை, 2004இல் இருந்ததை விட இப்போது மேலும் வஞ்சகத்தனமானதாக மாறி யுள்ளது. பொருளாதார அடியாட்கள் தங்களுடைய பத விகளை விரிவாக்கியுள்ளதோடு, புதிய கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர், புதிய மாறுவேடங்கள் தரிக்கின்றனர். இவற்றுக்கு மொத்த உலகமே பலியாகி யுள்ளபோதிலும், அமெரிக்கா அதற்கு ஒரு பெரிய விலை யைக் கொடுத்துள்ளது. பொருளாதார, அரசியல், சமூக மற்றும் சுற்றுச்சூழல்ரீதியான பேரழிவின் விளிம்பில் நாம் இப்போது தள்ளாடிக்கொண்டிருக்கிறோம். நாம் கண் டிப்பாக மாறியாக வேண்டும்.

எனவே, இக்கதை சொல்லப்பட்டே ஆக வேண்டும். நாம் இப்போது ஒரு பயங்கரமான, நெருக்கடியான கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது ஒரு மாபெரும் சந்தர்ப்பத்திற்கான காலமாகவும் திகழ்கிறது. இந்தக் குறிப்பிட்டப் பொருளாதார அடியாள் ஒருவனின் கதை, இன்று நாம் இருக்கின்ற இடத்திற்கு நாம் எப்படி வந்து சேர்ந்துள்ளோம் என்பதையும், தீர்க்கப்படவே முடி யாது என்பதுபோலத் தோன்றுகின்ற ஒரு நெருக்கடியை நாம் ஏன் எதிர்கொண்டுள்ளோம் என்பதையும் குறித்தக் கதையும்கூட.



நான் ஒரு பொருளாதார அடியாளாக இயங்கிக்கொண்டி ருந்தபோது, அது சிறியதொரு குழுவாகவே இருந்து வந் தது. ஆனால், அதைப் போன்ற பாத்திரங்களை வகிக் கின்ற நபர்கள் இன்று பல்கிப் பெருகியுள்ளனர். இன்று அவர்கள் நயமான பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். எக்ஸன், வால்மார்ட், ஜெனரல் மோட்டார்ஸ், மான் சன்டோ போன்ற 'ஃபார்ச்சூன் 500' பெருநிறுவனங்களின் தாழ்வாரங்களில் அவர்கள் உலவிக்கொண்டிருக்கின்றனர். அந்நிறுவனங்கள் தம்முடைய சொந்த நலன்களுக்காகப் பொருளாதார அடியாள் அமைப்புமுறையைப் பயன் படுத்திக்கொண்டிருக்கின்றன.

ஒரு விதத்தில் பார்த்தால், இப்புதிய பதிப்பு, பொரு ளாதார அடியாட்களின் இப்புதிய அவதாரங்கள் பற்றிய ஒரு கதையும்கூட.


இது உங்களுடைய கதையும்கூட. உங்களுடைய உல கம் மற்றும் என்னுடைய உலகத்தின் கதை இது. இதில் நாம் எல்லோருமே உடந்தைதான். நம்முடைய உலகிற்கு நாம் அனைவருமே பொறுப்பேற் றுக்கொள்ள வேண்டும். பொருளா தார அடியாட்களுடன் நாம் ஒத்துழைப்பதாலேயே அவர்கள் தங்களுடைய வேலையில் வெற்றி பெறுகின்றனர். அவர்கள் நம்மை மயக்குகின்றனர், நம்மை முகஸ்துதி செய்து தம் வசப்படுத்து கின்றனர், நம்மை அச்சுறுத்துகின் றனர். ஆனால், அவர்களுடைய செயல்களை நாம் கண்டும் காணாதது போல நம் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொள்கின்றபோதும், அவர்களு டைய தந்திரங்களுக்குப் பலியா கின்றபோதும் மட்டுமே அவர்கள் வெற்றி பெறுகின்றனர்.

இந்நூலை நீங்கள் படிக்கின்ற போது, நான் எழுதிக்கொண்டிருந்த சமயத்தில் நான் கற்பனைகூடச் செய்திராத நிகழ்வுகள் நிகழ்ந்தி ருக்கக்கூடும். அந்நிகழ்வுகளை யும், வருங்காலத்தில் நிகழவிருக் கின்ற நிகழ்வுகளையும் புரிந்துகொள்ள உங்களுக்கு ஒரு கண்ணோட்டத்தை வழங்குகின்ற ஒன்றாக நீங்கள் இப் புத்தகத்தைப் பார்க்குமாறு நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு பிரச்சனை இருக்கிறது என்பதை ஒப்புக்கொள் வதுதான் அது குறித்த தீர்வுக்கான முதற்படி. ஒரு பாவ த்தை ஒப்புக்கொள்வது என்பது அதிலிருந்து மீள்வதற் கான தொடக்கமாகும். இந்நூல் நம்முடைய விமோச னத்திற்கான ஒரு தொடக்கப்புள்ளியாக அமையட்டும். ஒரு புதிய அர்ப்பணிப்பு நிலைக்கு நம்மை எடுத்துச் செல்ல இது நம்மை ஊக்குவிக்கட்டும். கௌரவமான, சமூக நீதி கோலோச்சுகின்ற ஒரு சமதர்மச் சமுதாயம் குறித்த நம்முடைய கனவை நனவாக்குவதை நோக்கி இது நம்மை உந்தித் தள்ளட்டும்.

- ஜான் பெர்க்கின்ஸ்
அக்டோபர் 2015

தர்மராசா




# பூசாக் கைதிகள் மத்தியில் ஒற்றுமை அதிகம்

13.04.2002 அன்று காலையில் களுத்துறைச் சிறையின் பி பிரிவில் உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்பாகப் பேசுவதற்காகக் கூட்டம் ஒன்று உணவு மண்டபத்தில் கூடியது. அந்தக் கூட்டத்துக்கு பி பிரிவின் 6 வார்ட்டுக்களின் காம்பறாப் பார்ட்டிமார் தலைமை தாங்கினர். தற்போது உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற டி பிரிவினருக்கு ஆதரவு தெரிவிப்பதா? இல்லையா? என்று முடிவெடுப்பதாகக் கூட்டத்தின் நோக்கம் இருந்தது. இரு வேறுபட்ட கருத்துகளுக்கும் கைதிகள் மத்தியில் ஆதரவு இருந்தது. எனினும் பெரும்பாலான கைதிகள் ஆதரவளிப்பதில்லை என்ற நிலையில் இருந்தனர்.

**போராட்டத்துக்கு ஆதரவளிக்காதவர்களின் கருத்துகள்**

உணவு தவிர்ப்பை தொடங்கும் முன் உரிய முறையில் பி பிரிவுக்கு அறிவிக்கத் தவறியமை, 5ஆம் மாத முடிவு வரை காத்திருந்து கைதிகளை அரசு விடுவிக்காமல் விட்டால் எல்லோரும் சேர்ந்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதிப்பது, கடந்த கால நடவடிக்கைகளைப் பார்க்கும்போது டி பிரிவினர் இதே தவறைத் தொடர்ந்தும் விட்டு வருகின்றனர், பின்னர் மன்னிப்புக் கேட்பதில் அர்த்தமில்லை, அவர்களின் விடாப்பிடியான எழுந்தமான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப்போவதில்லை ஆகிய கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

**ஆதரவளிக்க வேண்டும் என்பவர்களின் கருத்துகள்**

பொருத்தமில்லாத தருணத்தில், உரிய முறையில் கலந்தாலோசிக்காமல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கியது தவறானாலும் நாம் பிரிந்து செயற்படுவது நல்லதல்ல, சுழற்சி முறையிலாவது உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு அவர்களுக்கு ஆதரவளிக்கவேண்டும் (10பேர் சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டால் ஏனையவர்கள் சிறைச்சாலை உணவைப் பெறுவது) ஆகிய விடயங்களை ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று கருதியோர் வெளிப்படுத்தினர்.

பொதுவாக இந்தக் கூட்டத்தில் கதைத்த விடயங்கள் பி,டி பிரிவினருக்கிடையில் நீண்ட காலம் இருந்து வரும் முரண்பாடுகளாகவே வெளித்தெரிந்தன. 15ஆம் திகதியிலிருந்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு ஆதரவாக 15பேர் கை உயர்த்தினார்கள். அங்கு எல்லாமாக 125 பேர் வரை இருந்தார்கள்.

12.04.2002 உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளில் 3 பேர் அதிக பாதிப்புக்குள்ளாகிச் சிறைச்சாலை மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லப்பட்டார்கள் என்று அறிந்தேன். மனக்குழப்பமான, எரிச்சல் வருகின்ற நிலையில் கைதிகள் எப்போதும் சிறைக்குள் இருப்பதால் குழம்புவதும் தெளிவதும் சாதாரண விடயங்களாக இருந்தன. எதிலும் தீர்க்கமான முடிவையோ, ஒருமித்த கருத்துருவாக்கத்தையோ ஏற்படுத்திவிட முடியாதிருந்தது.

14.04.2002 அன்று பி பிரிவில் 35 பேர் வரை சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். சிலர் பட்டினி கிடக்க பலர் உணவுண்பது சங்கடமான விடயமாக இருந்தது. டி பிரிவில் முதலில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் அங்குள்ள ஏனைய கைதிகளும் சேர்ந்துகொண்டார்கள். அதனால் யாரும் அங்கு சிறைச்சாலை உணவை எடுக்கவில்லை.

அன்றைய தினம் புதுவருடம் என்பதால் காலையில் பாற்சோறும் பகல் இறைச்சியுடன் உணவும் தந்தார்கள். பி பிரிவில் உள்ளவர்கள் எடுத்தோம். ஈ வார்ட்டில் 2 பேர் கூரைக்கு மேல் ஏறியிருந்தார்கள். திலக் என்ற ஜெயிலர் (முன்பு படையில் சேவையாற்றினார். புலிகளிடம் கைதியாக இருந்து விடுவிக்கப்பட்டவர். கைதிகள் மத்தியில் அவருக்கு நன்மதிப்புண்டு) புதுவருட நாளில் கூரைக்கு மேலே இருக்கவேண்டாம் என்று கூரையில் ஏறிய கைதிகளைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தக் கைதிகள் கீழே இறங்கினார்கள்.

உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டோரின் நிலை 15.4.2002 அன்று மிகவும் மோசமாக இருந்தது என்று அறிந்தோம். பி பிரிவில் காம்பறாப் பார்ட்டிகளின் கருத்துக்கு மாறாக யாரும் செயற்பட்டதாகத் தெரியவில்லை.


பூசாவிலிருந்து களுத்துறைக்கு வந்த நாம் அனைவரும் ஓரணியாகச் சேர்ந்து கதைத்தோம். பூசாவிலிருந்ததுபோல ஒரு பொதுப் பிரச்சினை வரும்போது சகலரும் இணையும் நிலையோ எல்லோரும் கலந்து கொள்ளும் நிலையோ களுத்துறையில் இருக்கவில்லை. பொதுவாக ஒரு வார்ட்டில் தொடர்ந்தும் இருப்பதால் அது மட்டும்தான் வாழ்க்கை, உலகம் என்ற மனப்பாங்கு கைதிகள் மத்தியில் வளர்ந்திருந்தது. சிலர் தாங்கள் தங்கியிருக்கும் வார்ட்டுகளைத் தமது வீடு போல உரிமை கோரும் மனப்பாங்கும் இருந்தது. அதற்குக் காரணம் அவர்களது மனநிலையில் தமக்கு இப்போதைக்கு விடுதலை இல்லை என்பதைத் தீர்மானித்திருந்தமையே.

பூசா நண்பர்களைப் பொறுத்தவரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஆதரவளிக்கவேண்டும் என்பது தான் குறிக்கோளாக இருந்ததே தவிர அவர்கள் எந்த வார்ட்டைச் சேர்ந்தவர்கள் என்ற பிரச்சினை இருக்கவில்லை. எல்லோரும் தமிழர்கள், அரசியல் கைதிகள் தூரத்துச் சிங்களச் சிறைகளில் நிர்க்கதியற்ற நிலையில் இருப்பவர்கள் என்ற பொது எண்ணம் இருந்தது. நான் முன்பு (2000) களுத்துறைச் சிறையின் சி பிரிவில் இருந்தபோதும் அங்கு எல்லா நிகழ்வுகளிலும் இணைந்து செயற்படும் தன்மையே கைதிகளிடம் காணப்பட்டது. அதே கைதிகள் பூசாவுக்கு ஏற்றப்பட்டு மீண்டும் களுத்துறைக்கு வந்திருந்தோம். அதனால் எதிலும் இணைந்து செயற்படும் தன்மை நீடித்தது.

(தொடரும்)

# “நாங்கள் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் பிரபாகரன் கேட்கவில்லை”

**சத்தியநாதன்**



2009இல் போர் முடிவுக்கு வந்தது. அது முடிந்து 5 வருடங்கள் ஆகியிருந்த நிலையில் ஓரிடத்தில் ஒன்றுகூடிச் சிலர் உரையாடிக்கொண்டிருந்தனர். அந்த இடத்துக்கு வந்த ஒருவர் தன்னைப் புலிகளின் முக்கிய பிரமுகராகக் காட்டினார். "அந்தப் பக்கம் அண்ணை இருந்தவர், அவருக்கு அருகில் அன்ரன் அண்ணை, அவருக்கு அடுத்த படியாகத் தமிழ்ச் செல்வன் இருந்தவர் நான் பக்கத்திலை இருந்தனான்" என்று கதையைத் தொடங்கியவர், "நான் கூறியதை அண்ணை கருத்தில் எடுத்திருந்தால் இவ்வளவு அழிவும் வந்திருக்காது" என்று ஒரு கட்டத்தில் கூறி முடித்தார்.

விடுதலைப் புலிகள் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னர் இத்தகைய பேர் வழிகள் தமிழ்ச் சூழலில் அதிகரித்திருப்பது தமிழர்களின் வெட்கக்கேடான விடயங்களில் முக்கியமானது. விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் கனதியாலும் அதை முன்னெடுத் துச் சென்ற அந்த இயக்கத்தின் தலைவர் மற்றும் போராளிகளின் பற்றுறு தியாலும் தமிழீழப் போராட்டத்தைத் தூரநின்று வேடிக்கை பார்த்தவர் களாகவே இத்தகைய நபர்களில் பலரும் இருந்தார்கள். போரட்டத்தின் வீரியம் காரணமாக அதை அணுக முடியாதவர்களாக

இரு ந்த இத்தகையவர்கள் இப்போது புலிகள் இல்லாத காலத்தில் கதையளப்பவர்களாகச் சமூகத்தில் உலாவுகின் றனர்.

புலிகளின் போராட்டம் பற்றியும் அதன் தலைவரின் போராட்ட வழிநடத்தல் பற்றியும் நன்கு தெரிந்திருக்கின்ற தமிழ் மக்கள்கூட இத்தகைய நபர்களின் கதைக்குச் செவி சாய்க்கும் நிலையே காணப்படுகிறது. சிங்களப் படை அதிகாரிகள் பிரபாகரனை மெச்சும்போது அதைக் கொண் டாடும் நிலையில் தமிழ் மக்கள் இருக்கிறார்கள். தமது தலைவரைப் பற்றித் தமக்குத் தெரியாததை அவர்கள் சொல் வதைப்போல நடந்துகொள்கிறார்கள். விக்னேஸ்வரன் தம்பி என்று விழித்து உறவு கொண்டாடுகிறார், சீமான் அண்ணன் என்று கூவித் திரிகிறார். இவ்வாறு அவரவர் கூறுவதை முன்னிறுத்திக் கொள்ளும் நிலையில் தமது தலைவர் பற்றியறியாதவர்கள்போல தமிழ்மக்கள் உள்ளனர்.

**சீமானின் ஆமையிறைச்சிக் கதை**

புலிகளின் தலைவர் பிரபாகரனை முதற் தடவையாகச் சந்தித்தபோது அவர் தனது காலில் விழுந்தார் என்றும்



தான் அவரைத் தாங்கிப் பிடித்தார் என்றும் தான் பிர பாகரனுடன் ஆமை இறைச்சியுடன் உணவு உட்கொண் டார் என்றும் சீமான் அண்மையில் கதை விட்டார். இத ற்கு ஒப்பான பல சீமான்கள் 2009 மே மாதத்துக்குப் பின் னர் முளைத்திருக்கிறார்கள். உள்நாட்டிலும், வெளிநாடு களிலும் இத்தகைய பலர் இருக்கின்றனர். அரசியலுக் காகப் புலிகளைப் பயன்படுத்துவோரைத் தவிர, இங் குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகர்கள், பல்க லைக்கழக விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள், சட்டத் தரணிகள், பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் இத்தகைய முயற்சிகளில் இறங்கியிருக்கிறார்கள்.

**போராளிகள் மௌனித்திருக்கிறார்கள்**

பால்ராஜின் வழிநடத்தலில் இருந்த சார்ள்ஸ் அன்ர னிப் படையணி உறுப்பினர்கள் 2009க்குப் பின்னர் ஏதோ ஒரு தொழில் செய்து பிழைப்பு நடத்துகிறார்கள். தாம் போராடிய காலத்தில் களத்தில் அப்படிச் செய்தோம் இப் படிச் செய்தோம் என்று அவர்கள் அலட்டித் திரிவதில்லை. அதுபோலவே புலிகளின் முக்கிய பொறுப்புகளில் இருந் தவர்களும் கதை விடுவதில்லை. 2009க்குப் பின்பான காலப்பகுதியில் பிரபாகரன், பொட்டு அம்மான், அன் னர் பாலசிங்கம், தமிழ்ச் செல்வன், ஏனைய முக்கிய தளபதிகள் இல்லாத நிலை ஏற்பட்டதால் அவர்களுடன்

## திலீபனின் காய்ந்துபோன வயிற்றை முதலீடாக வைத்துப் பலர் வயிறு வளர்ப்பதைக் காணமுடிகிறது

தமக்கு இரகசிய உறவு இருந்தது, அவர்களுடன் உரை யாடலில் பங்குபற்றினோம், இவ்வாறான உதவிகளை யெல்லாம் செய்தோம், எமக்கு ஒரு சுதந்திர நாடு அமைய வேண்டும் என்ற விருப்பத்தில் அவற்றைச் செய்தோம், ஆனால் பிரபாகரன் அது விடயத்தில் தாங்கள் கூறிய தைக் கேட்கவில்லை, அவ்வாறு கேட்டிருந்தால் புலிகள் இப்படி அழிந்திருக்கமாட்டார்கள் என்று கூறிப் பலர் பிழைப்பை நடத்தி வருகின்றனர்.

**திலீபனின் நினைவேந்தல்**

திலீபனின் நினைவேந்தல் விடயத்தில் ஏற் பட்ட குழப்பம் என்பது புலிகள் ஈட்டிய மதிப் பைப் பயன்படுத்தித் தமது சமூக மதிப்பை உயர்த் திக் கொள்வதற்காகப் பலரும் முன்னெடுத்த போட்டியே. புலிகள் போராடிய காலத்தில் அவர் களுக்கு எதிராகச் செயற்பட்டவர்களும், புலிக ளால் தேடப்பட்ட சமூக விரோதிகளும் தற்போது திலீபனுக்காக இரங்குவது தெரிகிறது. திலீபனின் காய்ந்துபோன வயிற்றை முதலீடாக வைத்துப் பலர் வயிறு வளர்ப்பதைக் காணமுடிகிறது. அவ் வாறானவர்கள் இன்றைய சமுதாயத்துக்குத் தாங்களும் புலிகளுடன் நின்றவர்கள்தான் என்று கூற முற்படுகின்றனர். புலிகளின் நிலைப்பாட்டுக்கு எதிரான போக்கைக் கொண்டிருந்ததும், இந்தி யாவுடன் இணைந்து செயற்பட்டதுமான ஈ.பி. ஆர்.எல்.எவ்வின் மூத்த உறுப்பினரான ரமணித் தோழர், அரசியல் ஆய்வாளர், மூத்த சட்டத்தரணி ஆகிய முகமூடிகளை அணிந்தவாறு திலீபனின் நினைவேந்தலை எவ்வாறு மேற்கொள்வது என்று ஆலோசிப்பது வேடிக்கையாகவுள்ளது.

**நாடாளுமன்ற உறுப்பினரின் பொய்**

தான் ஒரு தடவை தலைவர் பிரபாகரனுடன் கதைத் துக்கொண்டிருந்தபோது மாவை அண்ணை எந்தக் கட்சி என்று தன்னிடம் பிரபாகரன் கேட்டார் என்றும் இலங் கைத் தமிழ் அரசுக் கட்சி என்று தான் கூற அந்தக் கட்சிதான் தானும் என்று பிரபாகரன் தன்னிடம் கூறினார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கதை விட்டார். மாவை சேனாதிராசாவின் கட்சி எது என்று தெரியாமல் பிரபாகரன் இருந்தார் என்பதைவிட வேறெ ன்ன வேடிக்கை வேண்டிக் கிடக்கிறது. போராட்டத்தின் வலி தெரியாத பலர் இன்று தம்மை முக்கிய பிரமுகராகக் காட்ட முனைவது புலிகளின் தலைவர்கள் எவரும் உயி ருடன் இல்லை என்ற தற்துணிவிலேயே அன்றி வேற ல்ல என்பதே இங்கு உண்மை. அவர்களது கதையை தவறென்று எண்பிக்க யாரும் இல்லாததால் அவர்களின் வழி தனி வழியாக இருக்கிறது.

# கண்டறியாத கதைகள்

09



யசோமாமி

வணக்கம் மருமக்களே!

எல்லோரும் எப்படி இருக்கிறீர்கள்? பெற்றோர், ஆசிரியர்களின் சொல் கேட்டு நடக்கிறீர்களா? நன்றாகப் படிக்கிறீர்களா? உங்களுக்குப் பிடித்த பாடம் என்ன? ஏன் உங்களுக்கு அந்தப் பாடம் பிடிக்கும்? வளர்ந்த பிறகு உங்களுக்கு என்னவாக வர விருப்பம்? அது பற்றி எனக்கு அறியத் தருகிறீர்களா? 0763983858 இந்த வட்ஸ்அப் இலக்கத்திற்கு அதனை எழுதி உங்கள் வகுப்பு, பாடசாலை, உங்கள் பெயர், பிறந்த தினம் போன்ற விவரங்களை எழுதி அனுப்பி வையுங்கள். அதில் அதிஸ்டசாலி ஒருவருக்கு யசோ மாமியிடம் இருந்து ஒரு அன்பளிப்புப் பொருள் அனுப்பி வைக்கப்படுவதோடு அந்த அதிஸ்டசாலியின் பெயர் செம்மண் பத்திரிகையிலும் பிரசுரமாகும்.

முத்திரைகள் ஒட்டி அனுப்பப்படும் தபால்கள் பற்றி உங்களுக்குத் தெரியும் அல்லவா? சரி, இன்றைக்கு நாங்கள் அந்த முத்திரைகளை ஒட்டி வரும் தபால்களைத் தருபவரைப் பற்றிப் பார்ப்போம்.

அத் தொழிலைச் செய்பவரை தபால்காரர் என்று அழைப்போம். நீங்கள் எப்போதாவது தபால்களைக் கொண்டு வந்து தரும் தபால்காரரைப் பார்த்திருக்கிறீர்களா? ஈருளியில் (சைக்கிளில்) உங்கள் வீட்டுக்குரிய தபால்களைக் கொண்டு வந்து தருபவரை நாங்கள் தபால்காரர் என்று அழைப்போம்.

இன்றைக்கு ஒரு புதுமையான வாகனத்தில் வரும் தபால்காரரை உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போகிறேன். நான் வாழும் சிட்னி மாநகரில் தபால்காரர் ஈருளியில் வருவதில்லை. அவர் அவருக்கென விசேடமாக அமைக்கப்பட்ட மின்சாரத்தில் இயங்கும் சத்தம் எதுவும் கேட்காத தனி வாகனம் ஒன்றில் தான் வந்து நமக்கான தபால்களை நம் தபால் வீடுகளில் இருக்கும் தபால் பெட்டிக்குள் போட்டு விட்டுப் போவார்.

தபால் கந்தோருக்கு அருகில் இருக்கும் இடங்களுக்குக் கையில் தள்ளக்கூடிய மூன்று சக்கர வண்டில் போன்ற அமைப்பினை தள்ளிக் கொண்டு தபால்களை அவ் அவ் பெட்டிகளுக்குள் போடுவார்கள். தூர இடங்களுக்கு சென்று போட வேண்டி இருப்பின் அவர்கள் இவ்வாகனங்களில் பாதுகாப்பாகச் சென்று தபால்களை உரியவர்களின் வீட்டுத் தபால் பெட்டிகளுக்குள் போட்டு விட்டுச் செல்வார்கள். என் வீட்டுக்கு வரும் தபால்காரரையும் அவரின் வாகனத்தையும் தான் இந்தப் படத்தில் பார்க்கிறீர்கள்.



இன்னுமொரு புதினம் உங்களுக்குத் தெரியுமா? இங்கு ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றி பெண்களும் தபால்காரர்களாக இருக்கிறார்கள். எங்களுக்குத் தபால் தருபவர் ஒரு பெண். அவர்கள் வேலைக்கு விண்ணப்பிக்கும் போது தமக்குரிய வாகன சாரதி அனுமதி அட்டையைப் பெற்று, தகுதிகாண் தேர்வில் வெற்றி பெற்று வேலைக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

ஒருவர் இன்னொருவருக்கு போடும் கடிதம் எப்படி எங்களை வந்தடைகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? அது பற்றி அடுத்த முறை எனக்குச் சொல்கிறீர்களா?

அதுவரை நீங்கள் நல்ல பிள்ளைகளாக, ஒழுக்கமுள்ள பிள்ளைகளாக, மற்றவர்களுக்கு உதவி செய்யும் பிள்ளைகளாக, உயிர்களை அன்பு செய்யும் பிள்ளைகளாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.



கு.கணேசன்

# கருப்பை... கவனம்!

என்னுடன் பல்கலைக்கழகத்தில் படித்த பெண் மருத்துவருடன் சமீபத்தில் பேசிக்கொண்டிருந்த போது அவர் சொன்ன ஒரு உண்மையை இங்கே பகிர்ந்துகொள்கிறேன்.

அவரிடம் சிகிச்சைக்கு வந்த ஒரு பெண்ணுக்கு வயது 40. தனியார் அலுவலகத்தில் உதவியாளர் வேலை. கணவர் முச்சக்கரவண்டிச் சாரதி. குடிகாரர். தொடர்ச்சியான அடி வயிற்று வலி, ஒழுங்கில்லாத மாதவிலக்கு காரணமாக அந்தப் பெண் சிகிச்சைக்கு வந்திருக்கிறார். பல பரிசோதனைகளுக்குப் பிறகு அவருக்கு கர்ப்பப்பை வாயில் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த அறிவிப்பில் அவர் அதிர்ந்துபோனாள்.

தன்னுடைய ஆரோக்கியத்தைப் பேணுவதில் மிகுந்த அக்கறை கொண்டவர் அந்தப் பெண். உணவுக் கட்டுப்பாடு, உடற்பயற்சி, யோகா என பலவற்றையும் கடைப்பிடித்து உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்வார். குடும்பத்தில் யாருக்கும் புற்றுநோய் வந்ததில்லை. அப்படி இருந்தும் அவருக்கு புற்றுநோய் வந்ததில் அதிகம் மனக்கவலையில் இருந்தார். 'எனக்கு இந்த நோய் ஏற்பட என்ன காரணம், டாக்டர்?' என்று அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தார். அதனால் அவருடைய கணவரை ஒருநாள் அழைத்து வரச்சொன்னார், பெண் மருத்துவர்.

இருவரிடமும் அவர்களது வாழ்க்கைமுறை, உணவுப் பழக்கம், மன ஆரோக்கியம், பாலுறவு சுகாதாரம் ஆகியவற்றை விசாரித்தார். பெரும்பாலும் அவருடைய கணவரிடம்தான் அதிகமாக கேள்விகள் கேட்டு பல விஷயங்களைச் சேகரித்தார். பல கேள்விகளுக்கு அவருடைய கணவர் மழுப்பலாக பதில் சொன்னாலும் மருத்துவரும் விடாப்பிடியாகத் தெளிவான பதில்களைக் கேட்டுப் பெற்றுவிட்டார். அவர்கள் கொடுத்த பதில்களைத் தொகுத்துப் பார்த்தபோது கணவரிடமிருந்துதான் அந்தப் பெண்ணுக்குப் புற்றுநோய் வந்திருப்பது புரிந்தது.

கர்ப்பப்பை வாயில் புற்றுநோய் வருவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், முக்கியமான காரணமாக இருப்பது அந்தரங்கச் சுத்தம் இல்லாமல் இருப்பதுதான். குடித்துவிட்டு மனைவியுடன் பாலுறவு கொள்ளும் ஆண்கள் இப்போது அதிகரித்துவிட்டார்கள். பாலுறவுக்கு முன்பும் பிறகும் அந்தரங்க உறுப்புகளைக் கழுவி சுத்தம் பேணுவதில் பொறுப்பில்லாமல் நடந்துகொள்கிறார்கள். பல பெண்களுக்குக் கர்ப்பப்பை வாயில் புற்றுநோய் வருவதற்கு இதுவும் ஒரு காரணம்' என்று சொன்னபோது, அவருடைய கணவர் குற்றவுணர்ச்சியில் தலை குனிந்தார். தன்னுடைய தவறால் தனக்கு புற்றுநோய் வரவில்லை என்பது தெரிந்து அந்தப் பெண் ஆறுதல் அடைந்தார்.

பெண்களிடம் காணப்படும் புற்றுநோய்களில் முக்கிய இடத்தை இந்தக் கர்ப்பப்பை புற்றுநோய் பெற்றுள்ளது, நோயால் பாதிக்கப்படுபவர்களில் கணிசமானோர் இறந்துவிடுகின்றனர். இத்தனைக்கும் இந்தப் புற்றுநோயை 100% தடுத்துவிடலாம். வளர்ந்த நாடுகளில் இந்த நோயை முன்னரே அறியும் 'ஸ்கிரீனிங்' பரிசோதனைகளை எல்லா பெண்களும் மேற்கொள்வதாலும் முறையாகத் தடுப்பூசிகள் போட்டுக்கொள்வதாலும் அந்த நாடுகளில் இந்தப் புற்றுநோய் வருவது குறைந்து வருகிறது.

**நோய் வரக் காரணம்**

ஒரு பேரிக்காய் அளவில் இருக்கின்ற கர்ப்பப்பையின் கீழ்ப்பகுதியில், பிறப்பு உறுப்பு இணைகிற இடத்தில் 'செர்விக்ஸ்' என்று அழைக்கப்படுகிற கர்ப்பப்பை வாய் உள்ளது. 'ஹியூமன் பாப்பிலோமா வைரஸ்' (Human Papilloma Virus- சுருக்கமாக HPV) என்கிற கிருமி அந்த இடத்தைத் தாக்கும்போது புற்றுநோய் வருகிறது. இந்த வைரஸ் கிருமி பாலுறவு மூலமே பரவுகிறது.

பொதுவாக, இந்த வைரஸ் கிருமியின் தாக்குதலின் போது, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக இருந்தால், அந்த நபருக்குப் புற்றுநோய் வருவதில்லை. இந்த மாதிரியான பெண்களின் உடலில் இந்த வைரஸ் கிருமி அழிக்கப்பட்டுவிடும். எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு இந்த வைரஸ் கிருமி கர்ப்பப்பை வாயை ஆக்கிரமித்து, சிறிது சிறிதாக அங்குள்ள செல்களைத் தாக்கிப் புற்று

நோயை உருவாக்குகிறது. சில பெண்களுக்கு இந்தக் கிருமி சில காலத்துக்கு உடலுக்குள்ளேயே அமைதியாகக் காத்திருந்து, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையும்போது வீரியம் பெற்று தாக்குதல் நடத்துகிறது. அப்போது இயல்பான செல்களில் மாற்றம் ஏற்பட்டு, அதிவேகத்தில் பெருக்கம் அடைந்து, புற்றுநோயை உருவாக்குகிறது.

**யாருக்கு ஆபத்து அதிகம்?**

திருமணத்துக்கு முன்பே (15 வயது அல்லது அதற்குக் கீழே) பாலுறவில் ஈடுபடும் பெண்களுக்கு.

ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுடன் பாலுறவு வைத்துக் கொள்ளும் பெண்களுக்கு.

பல பெண்களிடம் பாலுறவு வைத்திருக்கும் கணவர்களால், மனைவிகளுக்கு.

கொனோரியா, எய்ட்ஸ் போன்ற பால்வினை நோய்கள் உள்ள பெண்களுக்கு.


15லிருந்து 45 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு.

பிறப்புறுப்பைச் சுத்தமாக வைத்துக்கொள்ளாத பெண்களுக்கு.

சுகாதாரமற்ற நாப்கின் பயன்படுத்தும் பெண்களுக்கு.

**அறிகுறிகள்**

கர்ப்பப்பை வாய் புற்றுநோய் ஏற்பட்டிருந்தால் உடனே அறிகுறிகள் தெரியாது. நோய் தொடங்கி சில வருடங்கள் கழித்துதான் அறிகுறிகளை அடையாளம் காண முடியும்.



அதற்குள் நோய் பல கட்டங்களைக் கடந்துவிடும். எனவேதான், பெண்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டியது அவசியம் என்று கூறுகிறார்கள்.

இந்த நோய் பாதிப்புள்ள பெண்களுக்கு அடிவயிறு கனமாக இருப்பது போன்ற உணர்வு ஏற்படும். மாதவிலக்கின்போது வலியுடன் கூடிய குருதிப்போக்கு ஏற்படுவதும், கட்டி கட்டியாக குருதிப்போக்கு உண்டாவதும் இந்த நோய்க்கே உரித்தான அறிகுறிகள். சிலருக்கு அசாதரணமான வயிற்றுவலி அடிக்கடி வரும். பாலுறவின்போது அதிக வலி ஏற்படுவதும், குருதிக்கசிவு உண்டாவதும், இரண்டு மாதவிலக்கு இடையில் திடீரென குருதிப்போக்கு உண்டாவதும் இந்த நோயை அடையாளம் காட்டும் அறிகுறிகளே. துர்நாற்றத்துடன் கூடிய வெள்ளைப்படுதல், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் முற்றியுள்ளதைத் தெரிவிக்கின்ற முக்கிய அறிகுறி. மாதவிலக்கு நின்ற பிறகு திடீரென்று குருதிப்போக்கு ஏற்படுமானால் இந்த வகைப் புற்றுநோய் இருக்க அதிக வாய்ப்புள்ளது. பசியின்மை, உடல் எடை குறைவது போன்ற துணை அறிகுறிகளும் இந்த நோயில் காணப்படும்.

**என்னென்ன பரிசோதனைகள்?**

திருமணமான எல்லாப் பெண்களும் 'பாப் ஸ்மியர்' (Pap smear) பரிசோதனையைக் கட்டாயம் செய்துகொள்ள வேண்டும். 21 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இரண்டு ஆண்டு இடைவெளியில் இந்தப் பரிசோதனையைச் செய்துகொள்வது நல்லது. 65 வயது வரை இந்தப் பரிசோதனையை மேற்கொள்ள முடியும். மாதவிலக்கு முடிந்து 7 முதல் 14 நாட்களுக்குள் இந்தச் சோதனையைச் செய்துகொள்ளலாம். வலி எதுவும் இல்லாத பரிசோதனை இது. செலவும் குறைவு.

இந்தப் பரிசோதனையில், கர்ப்பப்பை வாயில் உள்ள செல்களை ஒரு கண்ணாடி தட்டில் தேய்த்துப் பரிசோதிக்கப்படும். இதில் செல்களின் வளர்ச்சி மாறுபட்டிருந்தால் அல்லது அபரிமிதமாக காணப்பட்டால், உடனே பயாப்சி எடுத்து கர்ப்பப்பை வாய் புற்றுநோயை தொடக்க நிலையிலேயே கண்டறிய முடியும். இதன் மூலம் உயிரிழப்பைத் தடுக்க முடியும்.

அடுத்ததாக, 'லிக்யுட் பேஸ்டு சைட்டாலஜி' (Liquid based cytology) எனும் 'ஸ்கிரீனிங்' பரிசோதனையின் மூலமும் இந்த நோயை வெகு துல்லியமாகக் கண்டறிய முடியும். இதுவும் வலி இல்லாத பரிசோதனைதான். இதற்கான செலவு கொஞ்சம் அதிகம். இவை தவிர, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மற்றும் சிடி ஸ்கேன் பரிசோதனை மூலமும் இந்த நோயைக் கண்டறியலாம்.

இப்போது பாப் ஸ்மியருக்குப் பதிலாக 'விஷுவல் இன்ஸ்பெக்சன் வித் அசிட்டிக் ஆசிட்' (Visual inspection with acetic acid - VIA) என்று ஒரு பரிசோதனையும், 'விஷுவல் இன்ஸ்பெக்சன் வித் லூக்கால்ஸ் அயோடின்' (Visual inspection with Lugol's iodine - VILI) என்று ஒரு பரிசோதனையும் செய்யப்படுகின்றன. இந்த இரண்டும் மிக எளிமையான பரிசோதனைகள். கால்போஸ்கோப்பி எனும் கருவியின் உதவியுடன் புற்றுசெல்களை நேரடியாகப் பார்த்து நோயைக் கணிக்கின்ற பரிசோதனைகள்.

**சிகிச்சை என்ன?**

தொடக்கநிலையில் உள்ள புற்றுநோய்க்குக் கதிர்வீச்சு மற்றும் மருந்து சிகிச்சை கொடுத்துவிட்டு கர்ப்பப்பையை அறுவை சிகிச்சை செய்து அகற்றிவிடுகிறார்கள். அடுத்துள்ள புற்றுநோய் நிலைகளுக்கு பெரும்பாலும் கதிர்வீச்சு மற்றும் மருந்து சிகிச்சை மட்டுமே கொடுக்கிறார்கள். அறுவை சிகிச்சை மேற்கொள்வதில்லை. கதிர்வீச்சு சிகிச்சையில் டெலிதெரபி, பிரேக்கி தெரபி என இரு வகை உண்டு. நோயாளியின் தேவையைப் பொறுத்து ஏதாவது ஒரு வகை பயன்படுத்தப்படும்.

**வருமுன் காக்க...**

கர்ப்பப்பை வாய் புற்றுநோய் வராமல் இருப்பதற்குப் பெண்கள் பிறப்பு உறுப்பைச் சுத்தமாக வைத்துக்கொள்ள

வேண்டும். பாலுறவு விஷயத்தில் தனி மனித ஒழுக்கத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். திருமணமாகும் வரை பாலுறவைத் தவிர்க்கவேண்டும். இரு குழந்தைகளுக்கு இடையில் 3 ஆண்டு இடைவெளி அவசியம். 40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் ஆண் டுக்கு ஒருமுறை 'மாஸ்டர் ஹெல்த் செக்கப்' செய்துகொள்ள வேண்டும்.

**எளிதில் தடுக்கும் தடுப்பூசி!**

கர்ப்பப்பை வாய் புற்றுநோய் வரா மலே தடுக்க 'ஹெச்பிவி' தடுப்பூசி (HPV vaccine) உள்ளது. உலகச் சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைப்படி 9 வயது முடிந்த சிறுமிகளுக்கு இந்தத் தடுப்பூசியைப் போட்டுக்கொண்டால் கர்ப்பப்பை வாய் புற்றுநோயிலிருந்து 100% பாதுகாப்பு கிடைக்கும். இவர் களுக்கு இரண்டு தவணைகள் தடுப் பூசி போடப்பட வேண்டும். முதல் தவ ணையைப் போட்ட பிறகு 6 மாதங்கள் கழித்து இரண்டாவது தவணை போடப்பட வேண்டும். இப்படி 15 வயதுக்குள் போட்டுக்கொண்டால் நல் லது. அதற்கு பிறகு போடுவதாக இருந் தால், மூன்று தவணைகள் தேவைப் படும். அதாவது, முதல் ஊசிக்குப் பிறகு, இரண்டு மாதங்கள் கழித்து இர ண்டாவது தவணை, ஆறு மாதங்கள் கழித்து மூன்றாவது தவணையைப் போட்டுக்கொள்ள வேண்டும். இப்படி 45 வயதுவரை போட்டுக்கொள்ளலாம்.

---

**14**

# வாரம் ஒரு சொல்....!

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் பலவற்றைச் செம்மண் ஞாபகப்படுத்த முயற்சிக்கிறது. இத்தகைய சொற்களை முதியவர்களும் கிராமங்களில் வாழும் பூர்வீகத்தினர் சிலருமே இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச வாரியாகவும் தொழில் ரீதியாகவும் பண் பாட்டு விழுமியங்களின் வழியாகவும் பேசப்படுபவை யாக இவை இருக்கின்றன.

பேச்சு மொழியில் இருந்து வருகின்ற இத்தகைய யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள் பலவும் தற்போது அருகி வருகின்றன. அதற்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களும் இந்தியப் பேச்சு மொழிச் சொற்களும் பேசப்படுவது அதிகரித்து வருகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பாரம்பரியப் பேச்சு மொழிச் சொற்களை அழியவிடாது பாதுகாப்பதற்காகவும், நினைவு படுத்துவதற்காகவும் வாரம் ஒரு சொல் என்ற அடிப்படையில் அவற்றை வெளிக்கொணர இருக்கிறோம்.

இவ்வாறான அருகிவரும் சொற்களைச் செம்மண் பத்திரிகைக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக் கின்ற நீங்களும் அனுப்பி வைக்கலாம். அதற்கான விளக்கத்தையும் - அது எடுத்தியம்பும் கருத்தையும் விரிவாகக் குறிப்பிடலாம். அவ்வாறு அனுப்புவதன் மூலம் எதிர்காலத்தில் இந்தச் சொல்வளத்துக்கான ஓர் அகராதியைத் தயாரித்து அந்தப் பாரம்பரியச் சொற்களைப் பேணவும் தமிழ் மக்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தவும் அடுத்த சந்ததியினருக்குக் கடத் தவும் முடியும்.

இந்தச் சொற்களை அறிமுகப்படுத்துபவர்கள் அந் தச் சொல் எந்த அர்த்தத்தில் பேசப்படுகிறது என்ற கருத்தை முழுமையாகத் தருவதுடன் அது பெயர்ச் சொல்லாகவா அல்லது வினைச்சொல்லாகவா அல் லது எவ்வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் குறிப்பிடுவது சிறந்தது - வரவேற்கத் தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை மட்டுமல்லாது மட்டக்களப்பு, வன்னித் தமிழ்ச் சொற்களையும் இந் தப் பகுதியில் குறிப்பிடலாம். அந்தச் சொற்களையும் செம்மண்ணுக்கு அனுப்பி வையுங்கள். இது அருகி வரும் ஈழத் தமிழைக் காக்கும் ஒரு சிறு முயற்சியே.

இந்தவாரச் சொல்

## "இட்டுமுட்டு"

இட்டுமுட்டு என்கிற சொல் பெரும்பாலும் பெயர்ச் சொல்லாகவே யாழ்ப்பாணத் தமிழ் வழக்கில் பயன்ப டுத்தப்படுகிறது. சிறிய, குறுகிய, இடவசதியற்ற, நெருக்கமான, இடையூறான, நெருக்கடியான எனப் பல அர்த்தங்களைச் சுட்டிக்காட்டிப் பல்வேறு சந்தர்ப் பங்களில் இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது.

"இண்டைக்கு மரக்கறிச் சாப்பாடு என்பதால் வயிறு சரியான இட்டுமுட்டாக் கிடக்கு", "அவையின்ர வீட் டுக்குள்ள ரெண்டுபேர் காலை நீட்டிப் படுக்கக்கூட வசதியில்லாமல் இட்டுமுட்டான அறை", "அந்தப் பாதைக்குள்ளால ரக்ரரோ, லொறியோ போக முடி யாத அளவுக்கு இட்டுமுட்டாய் இருக்கும்", "அவன்ர வானில நின்டுகொண்டு போக முடியாத அளவுக்கு இட்டுமுட்டாய் இருக்கும்",

"அந்தக் கடைக்குள்ள நாலு சனம் நிண்டால் அந்த இட்டுமுட்டுக்குள்ள போய்ச் சமாளிக்க முடியாது", "இப்ப வாற வாகனங்களுக்கு இயந்திரங்களை இட்டு முட்டாகப் பொருத்திருப்பதால் அதன் ஓர் உதிரிப் பாகத்தைக் கழற்றவேண்டுமானால் வேறு பல உதி ரிப்பாகங்களையும் கழற்ற வேண்டிக் கிடக்கு", "பள்ளிக் கூடம் விட்டுப் பிள்ளைகள் வெளியில வந்தால் அந் தச் சின்னப் பாதையால ஒருவரும் போகேலாதபடி இட்டு முட்டாய் இருக்கும்", "அதற்குள் வாகனத்தைக் கொண்டு போய் திருப்பக் கொள்ள முடியாத அளவுக்கு இட்டுமுட்டாய் இருக்கும்" எனப் பல சந்தர்ப்பங்கள், செயற்பாடுகளின்போது இட்டுமுட்டு என்கிற இந்தச் சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பயன்படுத்தப் படுகிறது.

நட்சத்திரா

ஏன்...? அப்படி...?

35




# முகப்பூச்சுக் கிறீம்களால் தோல் வெளுப்பது ஏன்...?

இப்போதல்லாம் பெண்கள் மத்தியில் மட்டு மல்லாது ஆண்களிடமும் பிரபலம் அடைந்திருக்கின்ற ஒன்று அழகுக் கலை. அதில் அவர்கள் அதிகம் உழைக்கவும் செய்கிறார்கள். இதற்கு முதலில் அவரவர் முகத்தை அவரவரே அழகுபடுத்திக்கொண்டிருந்தனர். இப்போதும் அது தொடர்கிறது. பெண்கள் தமது முகங்களுக்கு பலவாறான முகப்பூச்சுக்களை இடுகின்றனர். பல வகையான கிறீம்கள் சந்தைக்கு வந்துவிட்டன. அவற்றைப் பயன்படுத்துவோரைக் கண்டுபிடிப்பதும் இலகுவானதாக இருந்தது.

முகப்பூச்சு இடும் பெண்களை இரண்டு முறைகளில் கண்டுபிடிக்க முடிந்தது. முகத்துக்கு முகப்பூச்சுப் பூசுவதில் பெண்கள் காட்டுகிற அக்கறையைத் தமது ஏனைய அங்கங்களுக்குப் பூச்சுப் பூசுவதில் காட்டுவதில்லை. இதனால் முகம் வெள்ளையாகியிருக்க கழுத்துக்குள் கீழான மற்றும் கை, கால் எனப் பல அங்கங்கள் அவர்களின் இயல்பான நிறத்தில் காணப்பட்டன. ஆனால் பிற்காலத்தில் பெண்கள் உடல் முழுதும் பூச்சுகள் பூசத் தொடங்கியதால் இப்போது இதைக் கண்டுபிடிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

அதுமட்டுமன்றித் தோலை வெண்மையாக்கும் எந்தவொரு செயற்கைக் கிறீம்களைப் பூசுபவர்களும் வெள்ளையாவதில்லை. அவர்கள் ஒரு வித வெளிறல் தன்மையிலேயே காட்சியளிப்பர். தோலை வெள்ளையாக்குதல் என்பதைச் செயற்கை முறையில் தூண்டுவதாலேயே அந்த வெளிறல் தன்மையை அடைகின்றனர்.

செயற்கைக் கிறீம்களால் இந்த வெள்ளை நிறம் எப்படிச் சாத்தியமாகிறது...? கிறீம்களால் கிடைக்கும்



# புளுக்கொடியல் மாவுருண்டை



வடக்கின் அடையாளம் பனை மரம். அதிலிருந்து கிடைக்கும் புழுக்கொடியானது வடக்கு மக்களின் சுதேச உணவுகளில் முக்கியமானது. பனங் கிழங்கை அவித்து வெயிலில் உலர்த்திப் பெறுவதே இந்தப் புளுக்கொடியல். அதனைப் பல காலத்துக்கு வைத்துப் பயன்படுத்த முடிவது அதன் சிறப்புகளில் முக்கியமானது. மறு வருடத்தில் புளுக்கொடிப் பருவகாலத்தை எதிர் கொள்ளும் வரைக்கும் அதைப் பத்திரப்படுத்தி வைத்து உணவாக்க முடியும். நமது முன்னோர்கள் இதைக் கடைப் பிடித்தனர். இப்போதெல்லாம் புளுக் கொடியைப் பலரும் கண்டு கொள்வதில்லை. கோதுமை மாப் பாவனையை விரும்பாமல் புளுக்கொடியல் மாவுவையும் அதிலிருந்து தயார் செய்யும் உணவுகளையும் உண்டே முன்னோர்கள் ஆரோக்கியம் காத்தார்கள். பிற்காலத்தவர்களோ அதற்கு மாறாகக் கோதுமை போன்ற மாவு வகைகளில் தங்கிவிட்டனர். பாடை மாவு என்று (பாடை கட்டுவதற்குப் பசை கிண்டப் பயன்படுவதால்) முன் னோர்கள் கோதுமை மாவை ஏளனம் செய்த நிலைமாறி இன் றைக்குப் பாடை மாவையே பலரும் நுகர்கிறார்கள். புளுக் கொடியல் மாவு பற்றி இன்றைய சந்ததியினருக்குத் தெரிந்திருப்பதில்லை. தெரிந் திருந்தாலும் அதை எவ்வாறு உண வாக்கி உண்பது என்று தெரிவதில்லை. கோதுமை மாவைப்போ லவே பைக்கற்றுகளில் அடைக்கப்பட்டு வருகிற பிற தானிய மாவுக்களை உருண்டைகளாக்கி உண்ணப்பழகிவிட்டவர் களுக்கு இந்தப் புளுக்கொடியல் மாவுப் பிரட்டல் புதிய சுவையைத் தரும்.




**தேவையான பொருள்கள்**

புளுக்கொடியல் மாவு கால்கிலோ, தேங்காய்த் துருவல் - பாதித் தேங்காய், சீனி - 100 கிராம்.

**எப்படிச் செய்வது...?**

புளுக்கொடி மாவைப் பாத்திரம் ஒன்றில் போட்டு அதற்குள் தேங்காய்த்துருவலையும் சேர்த்து பிசைந்து கொள்ளவேண்டும். சம நேரத்தில் சீனியையும் சேர்த்துக் குழைத்துக்கொள்ள வேண்டும். தேங்காய்த் துருவலில் இருந்துவரும் பாலின் ஈரப்பதன் உருண்டை பிடிப்பதற்குப் போதாமல் காணப்பட்;டால் சிறிதாக நீர் சேர்த்துப் பிரட்டிக் கொள்ளவேண்டும். இந்தக் கலவையை உருண்டைகளாக்கி உண்ணும்போது ருசியை உணரலாம். தேநீருடன் உண்ணும்போதும் வேறுபட்ட சுவையை அறியலாம்.

நிறம் நிரந்தரமானதா...? அவ்வாறு தோலின் இயற்கையான நிறத்தைச் செயற்கையாக மாற்றுவதால் சிக்கல்கள் ஏதும் இல்லையா...?

செயற்கைக் கிறீம்களைப் பயன்படுத்தித் தோலை வெள்ளையாக மாற்றுதல் என்பது குறுகிய காலத்துக்கு இயற்கையை மறைத்து வைத்தல் அல்லது மழுங்கடித்தல் செயற்பாடே. ஏனெனில் இயற்கையை வெல்லவோ, விஞ்சவோ மனிதனால் ஒருபோதும் முடியாது. அவ்வாறு சிறிய காலத்துக்கு இயற்கையை எதிர்த்துச் செயலாற்ற முடிந்தாலும் அதனால்கூடப் பல பாதகங்களையும், பக்க விளைவுகளையும் எதிர்கொள்ளவே நேரிடும். மனிதர்களின் தோலின் நிறம் என்பது இயற்கையால் தீர்மானிக்கப்படுகிறது. தோலின் நிறத்தைத் தீர்மானிப்பதில் 4 வகை நிறமிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றில் முக்கியமானது மெலனின். அதுவே மெலனோ சைட்டை உற்பத்தி செய்து தோலின் நிறத்தை உருவாக்குகிறது. அடுத்தது ஹீமோ குளோபின். இது குருதியில் உள்ள நிறமி. இது குறைந்தால் குருதிச் சோகை ஏற்படும். முகம் வெளிறிக் காணப்படும். ஒருவிதமான இந்த வெள்ளை வெளிறலைக் கண்டு நாம் வெள்ளை ஆகிவிட்டோம் என்று நினைக்கக் கூடாது. அது ஒருவித ஆரோக்கியக் குறைபாடு. மஞ்சள் காமாளையின்போது உடல் மஞ்சள் நிறமாகின்றது. இவ்வாறாக இயற்கையாக உடலின் நிறத்தைப் பலவும் தீர்மானிக்கின்றன. அதிலும் நோய்க் காரணிகள் தவிர மெலனின் மற்றும் ஹீமோ குளோபின் ஆகியனவே நிரந்தர நிறத்தைத் தீர்மானிக்கின்றன.

மெலனின் என்பது சூழல் தட்பவெப்பத்துக்கு ஏற்ப நிறமிகளை உற்பத்தி செய்வதால் தோல் நிறத்தைப் பெறுகிறது. அது உற்பத்தி செய்கின்ற நிறங்களைத்தான் நம்மவர்கள் செயற்கைக் கிறீம்களைப் பயன்படுத்தி மாற்றியமைக்கிறார்கள்.

அதாவது செயற்கைக் கிறீம்களைப் பூசிச் சூழல் தட்பவெப்பத்தை மறைத்துக்காட்டி மெலனிச் சுரப்பியை ஏமாற்றுகிறார்கள். இதனால் திக்குமுக்காடும் அதுவும் தனது வேலைப்பாட்டில் மாற்றங்களைச் செய்கிறது. இதனால் தோலின் நிறம் மாறுகிறது. ஆனால் அந்தச் சுரப்பி எந்நேரமும் செயற்பாட்டிலேயே இருப்பதால் வெயிலுக்குள் போய் விடக்கூடாது என்கிற கட்டாயத்தைக் கடைப் பிடிக்கவேண்டியிருக்கிறது. வெயிலுக்குள் போய்விட்டால் மெலனின் விழித்துக்கொண்டுவிடும். மாதக்கணக்கில் கிறீம் பூசியதெல்லாம் வீணாகித் தோல் மறுபடியும் பழைய நிறத்துக்கே சென்றுவிடும். இதனால் கிறீம் பூசுபவர்கள் வெயிலில் இருந்து மறைந்து வாழவேண்டும். இது வேலை, வெட்டியற்ற அல்லது அலுவலகம் போன்ற உள்ளக வேலையாளர்களுக்கே பொருத்தமானதாக இருக்கிறது. மாறாக அவர்கள் ஒருபோதும் வெள்ளையாவதில்லை.

மோகனா

# அறிவியல் ஆயிரம்

# ரோண்டேலெட்



குய்லூம் ரோண்டேலெட், (Guillaume Rondelet) என்பவர் மறுமலர்ச்சியின் பிற்பகுதியில் வாழ்ந்த ஒரு பிரெஞ்சு இயற்கை ஆர்வலர் (பிறப்பு புரட்டாதி 27, 1507, மான்ட்பெல்லியர் - இறப்பு ஆடி 30, 1566, ரியல்மொன்ட்). மேலும் இவர் ஒரு மருத்துவர். இவர் தான் கடல் விலங்குகள் மற்றும் தாவரங்கள் பற்றி முதன் மையாக மத்திய தரைக் கடல் வாழ் விலங்குகள் பற்றிய தனது விளக்கங்களால் விலங்கியல் துறையில் கணிசமான பங்களிப்பை வழங்கினார். தாவரவியல் மற்றும் மீன்கள் ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட ஆர்வத்துடன் செயல் பட்டார். உடற்கூறியல் நிபுணர் மற்றும் இயற்கை ஆர்வலர் எனப் புகழ் பெற்றவர். அவரது முக்கியப் பணி கடல் விலங்குகள் பற்றிய ஒரு நீண்ட ஆய்வு ஆகும். இதனைப் பற்றி எழுத இரண்டு ஆண்டுகள் எடுத்துக் கொண்டார். பின்னர் அதுவே ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு ஒரு நிலையான குறிப்புப் படைப்பாக மாறியது. ஆனால், அவரது நீடித்த தாக்கம் 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அறிவியல் உலகின் முன்னணி நபர்களாக இருந்த மாணவர்களின் பட்டியலைப் பற்றிய கல்வியில் இருந்தது. இவர் விலங்கியலின் தந்தை என்றும் போற்றப் படுகிறார்.

குய்லூம் ரோண்டேலெட்டின் பிறப்பும் இளமையும்

குய்லூம் ரோண்டேலெட் 1507ம் ஆண்டு, செப்டம்பர் 27ம் நாள், மத்திய தரைக்கடலுக்கு அருகிலுள்ள, தெற்கு பிரெஞ்சு நாட்டில், மாண்ட்பெல்லியர் என்ற ஊரில் பிறந் தார். அவரது தந்தை ஒரு நறுமணப் பொருட்கள் வியா பாரி, மருந்தாளர், மளிகைக் கடை மற்றும் மருந்து விற் பனையாளர் என பல தொழில்கள் செய்து வந்தார். அவ ரது தாயைப் பற்றி ஏதும் பதிவு கிட்டவில்லை. ஆனால் குய்லூம் ரோண்டேலெட் குழந்தையாக இருந்தபோது அவரது தந்தை இறந்துவிட்டார். எனவே, குய்லூம் ரோண்டேலெட், தனது மூத்த சகோதரரின் பராமரிப்பில் வளர்க்கப்பட்டார். அவர் 18 வயதை அடையும் வரை நோய்களால் தாக்கப்பட்டு எலும்பும் தோலுமாக இருந் தார். அதில் அவரது செவிலியரிடம் இருந்து சிபிலிஸ் நோயும் அவருக்கு ஏற்பட்டது. அவரது உடல்நிலையும் மோசமாக இருந்தது. அவர் மாண்ட்பெல்லியர் என்ற தனது சொந்த ஊரிலேயே கல்வி கற்றார். பின்னர் உடல் நிலை சீரானதும் கல்வி பயில 1525ம் ஆண்டு அவர் பாரிஸுக்கு அனுப்பப்பட்டார், அங்கு அவர் பாரிஸ் பல் கலைக்கழகத்தில் லத்தீன் மற்றும் தத்துவம் பயின்றார்.

**விலங்கியல் பங்களிப்பு**


ரொண்டெலெட், தான் சேகரித்த கடல்வாழ் உயிரினங் கள் பற்றிய தகவல்களை இரண்டு ஆண்டுகளாக எழுதி னார். அது மீன்களை மட்டுமல்ல, அனைத்து நீர்வாழ் விலங்குகளையும் உள்ளடக்கியது. அந்த நேரத்தில் வழக் கம் போல், குய்லூம் ரோண்டெலெட் மீன், கடல் பாலூட் டிகளான திமிங்கலங்கள், ஓட்டுமீன்கள் மற்றும் பிற முது கெலும்பில்லாத உயிரினங்களுக்கு இடையில் எந்த வித்தி யாசத்தையும் காட்டவில்லை. ஒட்டுமொத்தமாக, அவர் 244 வகையான மத்திய தரைக்கடல் மீன்களை விவரித் தார். ரோண்டலெட்டின் புத்தகத்தின் பெயர்: "கடல் மீன் களின் புத்தகம்"(1554-55;). இது கிட்டத்தட்ட 250 வகை யான கடல் விலங்குகளைப் பற்றி விரிவான விளக்கங் களைக் கொண்டுள்ளது. மான்ட்பெல்லியர் பல் கலைக் கழகத்தில் உடற்கூறியல் பேராசிரியராகவும், கார்டின லின் மருத்துவராகவும் பணியாற்றினார். இவர் ரோண் டெலெட் காய்ச்சல், நோய் கண்டறிதல் மற்றும் மருத்துவ மருந்துகள் தயாரிப்பது குறித்தும் விரிவாக எழுதினார்.

**மருத்துவக் கல்வி**

மருத்துவத்தில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்ட ரோண்டேலெட், தனது சொந்த நகரமான மாண்ட்பெல் லியர் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் சேர்ந் தார். குய்லூம் ரோண்டேலெட் 1530ம் ஆண்டு வழக்க றிஞராக (மாணவர் பதிவாளர்) ஆனார். இந்த நேரத்தில் அவர் சக மருத்துவரான ஃபிராங்கோயிஸ் ரபேலாய் ஸுடன் நட்பு கொண்டார். அவர் பின்னர் 'La vie de Gargantua et Pantagruel' என்ற இலக்கிய நாவலை எழுதினார். அதில் ரோண்டெலெட் "Rondibilis" என்ற மெல்லிய மாறுவேடத்தில் நையாண்டி செய்யப்பட்டார்.

**பணியும் திருமணமும்**

மான்ட்பெல்லியர் கல்வி நிறுவனத்தில் இளங்கலைப் பட்டம் பெற்ற பிறகு ரோண்டெலெட் பெர்டூயிஸ் நகருக்குச் சென்றார். மேலும் உள்ளூர் குழந்தைகளுக்குக் கற்பிப்பதன் மூலம் தனது வருமானத்தைப் பெருக்க முயன்றார். ஆனால் அதில் சிறிய வெற்றியையே பெற்றார். அவர் கிரேக்க மொழியைக் கற்கவும் உடற்கூறியல் படிக்கவும் மீண்டும் பாரிஸுக்குச் சென்றார். மீண்டும் கற்பித்தல் மூலம் தன்னை முன்னெடுத்துச் சென்றார். 1529ம் ஆண்டு அவர் மான்ட்பெல்லியருக்குத் திரும்புவதற்கு முன், ரோண்டெலெட் ஆவர்க்னில் உள்ள மரிங்குஸ்ஸில் மருத்துவராக சிறிது காலம் பயிற்சி செய்தார். அங்கு அவர் தனது முனைவர் பட்டத்தை முடித்தார். பின்னர் அடுத்த ஆண்டு 1538இல், குய்லூம் ரோண்டேலெட் ஜீன் சாண்ட்ரே என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்டார். இந்த ஜோடி அடுத்த ஏழு ஆண்டுகள் ஜீனின் சகோதரி



கேத்தரினுடனும் இணைந்து வாழ்ந்தது.

**ரெஜியஸ் மருத்துவப் பேராசிரியராக ரொண்டெலெட்**

ரொண்டெலெட் கற்பித்தல் மூலம் தன்னைப் பொருளாதாரத்தில் முன்னேற்றிக் கொண்டே உடற்கூறியல் படிப்பதற்காக பாரிஸ் சென்றார். சிறிது காலம் பயிற்சி செய்த பிறகு, அவர் தனது முனைவர் பட்டத்தை முடிக்க முடிந்தது. அங்கு அவர் 1545 இல் ரெஜியஸ் மருத்துவப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். இருப்பினும், அவரது மருத்துவப் பயிற்சி பெரிய வெற்றியைப் பெறவில்லை. அவர் தனது நிதியை மோசமாக நிர்வகித்ததே இதன் காரணி.

**அறுவை சிகிச்சையில் அவரது ஆர்வம்**

அவரது மருத்துவப் படிப்பின்போது, குய்லூம் ரோண்டெலெட், அந்த நேரத் தில் தடைசெய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஒப்பீட்டளவில் புதிய அறுவை சிகிச்சை என்பதன் நடைமுறையில் ஈர்க்கப்பட்டார்.

மாண்ட்பெல்லியரில் உள்ள பல்கலைக்கழகத்தில் பிரான்சில் முதல் அறுவை சிகிச்சை தியேட்டரை நிறுவிய பிறகு, அவர் தனது சொந்த குழந்தை மகனின் சடலத்தை அறுத்துப் பார்த்து இறப்பிற்கான காரணத்தையும், அவரது இரட்டையர்களின் பிறப்பையும் கண்டறிய முயற்சி செய்தார். இதனால் அந்த ஊரில் உள்ள அனைத்து மக்களும் அவர்மேல் கோபம் கொண்டனர். இந்த செயல்பாடு மூலம் நகர மக்களின் அவதூறுக்கு ஆளாகினார். மேலும் இறப்பிற்கான காரணத்தைக் கண்டறியும் முயற்சியில் அவர் தனது குழந்தை மகனை பகிரங்கமாக வெட்டி அறுத்துப் பார்த்ததால் மக்களின் வெறுப்புக்கும் ஆளானார்.

**மருத்துவப் பயிற்சி மூடல்**

ரோண்டேலெட் 1539ஆம் ஆண்டு மருத்துவ பீடத்தில் ஆசிரியரானார், ஆனால் சில ஆண்டுகளுக்குப் பிறகு மான்ட்பெல்லியரில் பிளேக் நோய் வந்ததால், கற்பிக்க கிட்டத்தட்ட யாரும் இல்லை என்ற நிலை ஆனது. 1543 இல் மூன்று மாணவர்கள் மட்டுமே எஞ்சியிருந்தனர். இந்த செயல்பாடும் மற்றும் அவரது நிதியின் மோசமான நிர்வாகத்துடன் சேர்ந்து, ரோண்டெலெட் தனது மருத்துவப் பயிற்சியை மூடுவதற்கு காரணமாக இருக்கலாம்.

**கார்டினல் உதவி**

அப்போது அதிர்ஷ்டவசமாக ரோண்டெலெட்டுக்கு, கார்டினல் ஃபிராங்கோயிஸ் டி டூர்னான் என்ற ஒரு பணக்கார புரவலரின் நட்பு கிடைத்தது. கார்டினலின் பரிவாரங்களுடன் தனது தனிப்பட்ட மருத்துவராகப் பயணிக்க ரோண்டெலெட் மான்ட்பெல்லியரை விட்டுச் சென்றார். ரோண்டெலெட் தனது தனிப்பட்ட மருத்துவராக கலந்துகொண்ட கார்டினல் பிரான்சுவா டி டூர்னான் என்ற சக்திவாய்ந்த புரவலரைப் பெற்றபோது ரோண்டலெட் புத்துயிர் பெற்றார்.

**பயணங்கள்**

கார்டினல் ஃபிராங்கோயிஸ் டி டூர்னான், குய்லூம் ரோண்டெலெட்டுக்கு பொருளாதார ரீதியாக உதவிடும் நபராக மாறினார். மேலும், அவரது ஆதரவுடன் பிரான்சின் சில பகுதிகளை (இன்றைய பெல்ஜியம் மற்றும் இத்தாலி) சுற்றிப் பார்த்தார். பின்னர் 154ஆம் ஆண்டு ரோமில் மூன்று மாதங்கள் தங்கினார்.

**பயணம் மற்றும் புத்தகம் -கடல் வாழ் உயிரினங்கள்**

குய்லூம் ரோண்டெலெட் ஏற்கனவே இயற்கை வரலாற்றில் ஆர்வமாக இருந்தபோதிலும், கார்டினலுடன் அவர் மேற்கொண்ட பயணத்தின் மூலம் கடற்கரையோரத்தில் பல கடல் விலங்குகளை அவதானிக்க முடிந்தது.

விலங்கியல் தொகுப்புகளுக்குப் பயன்படுத்திய அவரது சமகாலத்தவர்களைப் போலல்லாமல், லிப்ரி டி பிஸ்கிபஸ் மரினிஸில் உள்ள கடல் விலங்குகள் பற்றிய அவரது பெரும்பாலான விளக்கங்களை ரோண்டெலெட் தனது சொந்த முதல் பார்வையில் அடிப்படையாகக் கொண்டார். தனது சொந்த ஊரில் உள்ள மனித சடலங்கள் பற்றிய தனது பிரேத பரிசோதனை திறன்களை வளர்த்துக் கொண்ட அவர், கடல் பாலூட்டிகள் மற்றும் சிறிய திமிங்கலங்கள் உட்பட பல மாதிரிகளை தானே அறுத்துப் பார்த்து அதன் உட்பகுதிகளைக் கண்டறிந்தார்.

அவருடைய ஆராய்ச்சியானது அவருடைய சில சகாக்களை விட அனுபவபூர்வமானதாக இருந்தபோதிலும், அவர் தனிப்பட்ட முறையில் பார்க்காத "துறவி மீன்", "பிஷப் மீன்" மற்றும் "லியோனைன் போன்ற சில கேள்விக்குரிய இனங்களை Libri de piscibus marinis இல் இன்னும் சேர்த்துள்ளார்.

**ரோண்டெலெட்டின் புத்தக உருவாக்கம்**

அவர் 1551 இல் கார்டினலின் சேவையை விட்டு வெளியேறி தனது சொந்த ஊருக்குத் திரும்பினார் மற்றும்

கடல் விலங்குகள் பற்றிய ஒரு சிறந்த கட்டுரையை எழுதுவதற்கு இரண்டு ஆண்டுகள் அர்ப்பணித்தார், லிப்ரி டி பிஸ்கிபஸ் மரினிஸ் இன் கிபஸ் வேரே பிஸ்கியம் எஃபிஜிஸ் எக்ஸ்பிரஸ்ஸே சன்ட். அதை எழுத அவருக்கு இரண்டு ஆண்டுகள் பிடித்தன, தலைப்பு பிசி பஸ் (மீன்) பற்றிய குறிப்பு என்று இருந்த போதிலும், அது அனைத்து நீர்வாழ் விலங்குகளையும் உள்ளடக்கியது. அவரது காலத்தின் மற்றவர்களைப் போலவே, அவர் மீன், கடல் பாலூட்டி களான முத்திரைகள் மற்றும் திமிங்க லங்கள், ஒட்டுமீன்கள் மற்றும் பிற முதுகெலும்பில்லாத உயிரினங்களுக்கு இடையில் எந்த வேறுபாடும் காட்ட வில்லை. ஒட்டுமொத்தமாக, அவர் 244 வகையான மத்திய தரைக்கடல் மீன்களை விவரித்தார்.


**நன்னீர் உயிரிகள்**

நன்னீர் உயிரினங்கள் கடல் சூழ லில் வாழ முடியுமா மற்றும் அதற்கு நேர்மாறாக வாழ முடியுமா என்ற கேள்வியையும் அவர் சமாளித்தார். அவரது அணுகுமுறை அரிஸ்டாட்டி லின் அணுகுமுறையைப் போலவே இருந்தது, அதில் அவர் ஒரு உயிரி னத்தின் செயல்பாட்டு அம்சங்களில் கவனம் செலுத்தினார் மற்றும் ஒரு குறிப்பிட்ட அம்சம் அல்லது உறுப்பு ஏன், எப்படி செயல்படுகிறது என்பதை ஆய்வு செய்தார். உதாரணமாக, நன்னீர் மீன்களைப் பொறுத்தவரை, அவர் நன்னீர் மற்றும் கடல் மாதிரி களின் நீந்த உதவும் சிறுநீர்ப்பைகளைத் தேடி ஒப்பிட்டுப் பார்த்தார்.

ரோண்டெலெட் பல உயிரினங்க ளைப் அறுத்துப் பார்த்தும் விளக்கி னார். கடல் அர்ச்சினின் உடற்கூறியல் வரைதல், முதுகெலும்பில்லாத ஒரு உயிரினத்தின் முந்தைய சித்தரிப்பா கும், மேலும் டால்பின்கள், பன்றிகள் மற்றும் மனிதர்களுக்கு இடையே முக் கியமான உடற்கூறியல் ஒற்றுமைக ளைக் கண்டறிந்தார்.

ரோண்டெலெட் 1554 ம் ஆண்டு, வெளியிடப்பட்ட இந்த புத்தகம் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நிலை யான முக்கியமான குறிப்புப் படைப் பாகப் பயன்படுத்தப்பட்டது, மேலும் 1558 ம் ஆண்டு பிரெஞ்சு மொழியில் இது "மீனின் முழுமையான வரலாறு" என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப் பட்டது.

**பழைய நூல்களுக்கு மிகவும் விமர்சனம், கட்டுக்கதை என்று அவருக்குத் தோன்றக்கூடிய அனைத்தையும் அவர் நிராகரித்தார்**



**ரோண்டெலெட்டின் முக்கிய பணி**

மேலும் அவரது பிற்காலத்தில் கடல்வாழ் உயிரினங்களின் விலங்கி யல் கலைக்களஞ்சியத்தைத் தொகுத்து 1554-55 இல் நூலாக வெளியிட்டார். இந்தப் பணி மிகவும் குறிப்பிடத்தக்கது, ஏனெனில் பெரும்பாலான அவரின் விவரங்கள் ரோண்டலெட்டின் முதல்-நிலை அவதானிப்புகளின் அடிப்படை யில் மீனவர்களால் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் கொண்டு எழுதப்பட்டது. மேலும் அவற்றின் மரவெட்டு விளக் கப்படங்கள் அனைத்தும் வாழ்க்கை யிலிருந்து எடுத்து செய்யப்பட்டவை, இது அப்போதைய விலங்கியல் துறை யில் ஒரு புதிய விஷயமாகவே இருந் தது. மரவெட்டுகள் சிறியவை மற்றும் எளிமையானவை, ஆனால் நவீன மீனியலாளர்கள் புத்தகத்தில் உள்ள அனைத்து விளக்கப்படங்களையும் (நூற்றுக்கணக்கானவை) அடையாளம் காண முடியும் என்று கூறுவதும் மிக வும் துல்லியமாக செய்யப்படுகிறது.

**விலங்கியலின் பிதாமகன்களில் ஒருவர்**

ரொண்டலெட் பொதுவாக மறும லர்ச்சி விலங்கியலின் மூன்று தந்தை களில் ஒருவராக(Konrad Gesner & Pierre Belon) கருதப்படுகிறார். அவர்கள் கொன்ராட் மற்றும் பியெரி பெல்சன் இருவரும் தனிப்பட்ட கண் காணிப்பின் முக்கியத்துவத்தையும் வாழ்க்கையிலிருந்து வரையப்பட்ட படங்களை சேர்க்க வேண்டியதன் அவ சியத்தையும் வலியுறுத்தினர். அறிவி யல் சேகரிப்பு வரலாற்றில் ரோண்ட லெட்டின் புத்தகத்தின் இரண்டு தொகு திகளும் மிகவும் பயன் பாடுள்ளவை. அடுத்த நூறாண்டுகளுக்கு இவரது புத் தகம் கடல் விலங்கியலுக்கு உதவியது.

**துணிவாக தவறை சுட்டிக் காட்டியவர்**

பழைய நூல்களுக்கு மிகவும் விமர் சனம், கட்டுக்கதை என்று அவருக்குத் தோன்றக்கூடிய அனைத்தையும் அவர் நிராகரித்தார். 1545 இல் மாண்ட் பெல் லியரில் ரெஜியஸ் மருத்துவப் பேரா சிரியராக நியமிக்கப்பட்டதன் மூலம் அவரது பதவி உயர்வு உறுதிப்படுத் தப்பட்டது. தெற்கு பிரான்சில் உள்ள மான்ட்பெல்லியரில் மருத்துவம் கற் பித்தார்.

எழுத்தாளரின் சாதகத்தன்மையைப் பொருட்படுத்தாமல், லிப்ரி டி பிஸ்கி பஸ் மரினிஸ் அடுத்த நூறு ஆண்டு களுக்கு மீன் பற்றிப் படிப்பவர்களுக்கு முக்கியமான உறுதியான உரையாகக் கருதப்பட்டது, 250 க்கும் மேற்பட்ட கடல் பாலூட்டிகள் உண்மையில், இது வெளியிடப்பட்ட நான்கரை நூற்றாண் டுகளுக்குப் பிறகும், இது ஒரு கண்க வர் மற்றும் ஈர்க்கக்கூடிய படைப்பாக உள்ளது.

# எமையறிதல்

## 79

ஐயங்கொண்டான் சுவாமிகள்



எம்மால் முடியும் என்கிற நம்பிக்கையும் ஒரு எல்லைவரையே இருக்கவேண்டும். இதற்குத் தான் முன்கற்பிதங்களற்ற யதார்த்தமான எண்ணம் சுயமானதாக எம் மீதான சரியானதொரு மதிப்பீட்டினது அடிப்படையில் கையிருக்கவேண்டும். நான் ஆற்றவேண்டிய அல்லது விரும்பிய ஒரு கருமத்தை ஆற்றுவதற்கான முதற் காரணியும் மூல காரணியும் நானாகவே இருக்க வேண்டும் என்பது முக்கியமானது. அவ்வாறான எண்ணமானது வலிமையாக இருக்குமானால் எமக்கு வெளியேயான ஒன்றையோ பலதையோ நம்பியிருக்கத் தேவையேயில்லை.

எனக்கான எச்செயலினதும் மூலகாரணியும் நானே முதற்காரணியும் நானே என்பதன் அர்த்தம் என்ன? எண்ணம் எனது. திட்டம் எனது. முயற்சி எனது. விளைவும் எனதே. அப்படியெனில் யாவுமே சுயநலமானதா? சுயநலம் நல்லதுதானா? அவ்வாறான ஒருநிலைப்பாடு சரியானதா? என ஓராயிரம் வினாக்கள் எழுவது தவிர்க்க முடியாததே. ஆயினும் அவ்வாறான வினாக்கள் அவசியமானவையே.

சுயநலம் கூடாததுதான். இங்கு குறிப்பிடப்படுவது நான் என்கிற எனது தேவை, செயலுக்கான ஊக்கம், செயல் மதிப்பீடு, எனது இயலுமை, களச்சூழல் யதார்த்தம், விளைவினது பெறுமதி என்று எனதான சுயமதிப்பீட்டின் அடிப்படையிலான யதார்த்தமானதொரு மதிப்பீட்டிற்கான சுட்டியே. அவ்வாறான ஒன்றை நான் கொண்டிருக்க வேண்டியது அவசியமானது. அவ்வாறின்றி இருந்துவிட்டு எனக்கு வெளியேயான ஒன்றைச் சார்ந்து இருப்பதும் குறை கூறிக்கொண்டிருப்பதும் பொருத்தமற்றது. ஆயினும் நாம் அவ்வாறுதானே இருந்து கொண்டி ருக்கிறோம்.

செயலையும் செயலுக்கான திட்டங்களையும் செயலுக்கான முயற்சியையும் எனக்கு வெளியே வைத்துக்கொண்டிருந்து விட்டு விளைவினது பெறுதியை எப்படி எனக்கானதாக அல்லது எனக்குள்ளிருந்ததாக எப்படி எதிர்பார்க்கமுடியும்? இங்குதான் நாம் சகுனங்களை, ராசிகளை, தெய்வங்களை, பேய்-பிசாசுகளை, நட்சத்திரங்கள்-கோள்களை என எமக்கு வெளியோன கற்பனையில் உருவாக்கப்பட்ட, இருப்பதாக நம்புகிற எதையோ ஒன்றையோ பலதையோ நம்புகிறோம். எனக்கானது எனக்கு வெளியோயான ஒரு சூனியத்திலிருந்து கிட்டுமென நம்புவது ஒரு அறிவாளியினது செயலாக ஒருபோதுமே இருந்துவிட முடியாது.

இது ஒருபுறமிருக்க எனக்கானதை கண்களுக்குத் தெரிகிற எனக்கு வெளியேயான ஒன்றிலிருந்தும் எதிர்பார்த்திருக்கிறோம். நண்பனாக, உறவினனாக, சகாவாக, அயலவனாக, என எனக்கான தேவைகளை பெறுவதற்கான மூலங்களை அமைத்துக் கொண்டிருக்கிறோம். எனக்கான தேவையை எனக்கு வெளியேயான ஒருவனால் தீர்க்க முடியுமா? தேவையினது ஒரு பகுதியை அடைய அல்லது பெற்றுக்கொள்ள சிலவேளைகளில் உதவமுடியும் என்பதே யதார்த்தமானதாக இருக்கமுடியும்.

ஒரு பகுதியை ஓரிடத்திலும் பிறிதொரு பகுதியை வேறிடத்திலும் பகுதி பகுதியாகப் பெற்றுவிடலாம் என்றும் நம்புகிறோம். ஆக பகுதிகளாக எனக்கான தேவையை நிறைவேற்றலாம் என எண்ணுகிறோம். தேவையைப்



கதிரேசன் காத்தவராயன்

# அட அப்பிடியோ?

ஆண்டைக்கதிலை காரைநகர் றோட்டாலை போன கதை சொன்னனானில்லே? அண்டைக்கதிலை சங்கானை ரவுணுக்காலை அங்காலை போகப்பட்டபாடு பெரும்பாடாப் போச்சுது... முருகேசரும் பாவம் பின்னுக்கிருந்து குழறினபடிதான் 'கதிரேசு பாத்து கதிரேசு பாத்து' எண்டு. 'நானென்னப்பா பாக்காமலே ஓட்டுறன்... எப்பிடிப்பாத்தாலும் ஏதோ ஒரு கிடங்கல்லே கிடக்குது?' எண்டு வாயோயாமல் சொல்லவேண்டிப்போச்சு.

ஒருமாதிரிச் சித்தங்கேணிச் சந்திக்குப் போனால் சந்தியிலை காரைநகர் பஸ் காறன்... வட்டக்கோட்டைப் பக்கத்தாலை வந்து பெற்றோலுக்குப் போகவந்த ஆளொராள் பாவம் என்ன அவசரமோ பிள்ளையளையும் ஏத்திக்கொண்டு வந்தது பஸ்ஸின்ரை பின்பக்கம் மோதப்பாத்துது.. 'எட கறுமம்பிடிப்பாங்கள் சந்தியிலை அதுகும் முட்டுச்சந்தியிலை உப்பிடியே பஸ்ஸை விட்டு ஆக்களை ஏத்துறது... றோட்டிலைதான் வளம்மாறியும் கலைபடுகிறாங்களெண்டால் ஏத்திறதிலையும் அப்பிடியல்லே போட்டி போடுறாங்கள்?' எண்டு முருகேசர் புறுபுறுத்தார்.

அந்தக் காட்சியைப் பாத்துத் தடுமாறிக்கொண்டு வட்டுக்கோட்டைப் பக்கமாய் திரும்பினால் அங்கையும் வரிசையிலை பஸ்சுகள்... 'என்ன கதிரேசு டீசல் வரிசை முடியேல்லைப் போலை?' எண்டார் முருகேசர். இந்தாளுக்கு என்ன சொல்லுறதெண்டு யோசிச்சுக்கொண்டு நடுக்கோடு வரைக்கும் நிக்கிற பஸ்சுகளை விலத்திப் போற ரென்சனிலைவேறை தடுமாற 'கதிரேசண்ணை என்னப்பா இஞ்சாலை?' எண்ட குரல் கேட்டுது. திரும்பிப் பாத்தன் மோட்டச் சயிக்கிளை நிப்பாட்டி... சங்கரத்தை மணியத்தார்.

'என்ன மணியண்ணை நடையிலை?' எண்டு கேட்டதுக்கு 'என்னப்பா உன்ரை தைரியமும் துணிச்சலும் எனக்கில்லை... பாத்தியோ றோட்டையும் எங்கடை ஆக்களையும்...' எண்டு பெருமூச்சுவிட்டார். 'ம்ம்ம் உதுகுமொரு கதைதான்... எப்பிடியப்பா போகுது?' எண்டன். 'இப்பிடித்தான் நெளிஞ்சு வளைஞ்சு...' எண்டு சிரிச்சார். 'என்ன மணியண்ணை மறந்து போனியள் போலை?' எண்டு முருகேசர் கேக்க 'ஆ..மறக்கிற ஆளே நீ... இந்த றோட்டிலை அடுத்த ஆளைப் பாக்கேலாது கண்டியோ?'எண்டு சிரிச்சார்.

பொறுத்து தற்காலிகமான ஒரு தீர்வை மட்டுமே அப்படிப் பெறலாம் என்பது யதார்த்தமாக இருக்க நிரந்தரத் தீர்வாகக் கருதி அப்படியாக முயல்கிறோம். அது ஒருபோதுமே கையில் தங்கியிருக்காது என்பதை கவனத்திலெடுப்பது அவசியமானது. நிலையானதென்று ஒன்றில்லை என்பது உண்மையாயினும் எனக்கான தேவை நிலையானதென எண்ணியே எப்படியாயினும் அடைந்துவிடுதல் வேண்டுமென அலைகிறோம்.

நிரந்தரமென்றொன்று இல்லையென ஏற்றுக்கொண்டால் ஒரு தற்காலிகத் தீர்விற்காக எனக்கு வெளியிலான ஒன்றை நம்பியிருத்தல் என்பது எவ்வளவு முட்டாள்த்தனமானதென எண்ணிப் பார்க்க வேண்டும். கடவுளும் கைவிட்டார், நண்பனும் கைவிட்டான் கிரகதோசத்திற்காகச் செய்த பிராயச்சித்தமும் கைவிட்டது எனப் புலம்புவதில் நியாயப்படுத்தக்கூடிய ஏதாவது விடயம் உள்ளதா?

ஏமாற்றம் என்பதே எனதேயான இயலாமையினது வெளிப்பாடன்றி வேறில்லை என்பதே யதார்த்தமானது. நாம் அதனை ஏற்பதில்லை. எனது எதிர்பார்ப்பு கைக்குக் கிட்டவில்லை என்பது எனது பிழையா? எனக்கு வெளியேயான பிழையா? சூழல் எனக்கு வெளியேதானே இருக்கிறது? எனக்கேட்க முடியும். சூழல் வெளியேதான் இருக்கிறது. சூழலை மதிப்பிட்டுணர்ந்த கையாளும் பக்குவம் எனக்குள் ளல்லவா இருக்கிறது? ஆக சூழலும் வெளியே அல்ல. அதுவும் எனக்குள்ளானதுதான்.

எனக்குள்ளாகவே எல்லாமிருக்க என்னை ஏமாற்ற ஒருவனோ பலரோ வெளியேயிருந்தா வரவேண்டும்? என்னை ஏமாற்ற என்னைவிடப் பெரிய அயோக்கியனென்று ஒருவன் இருக்கவே முடியாது. நானே என்னை ஏமாற்றிவிட்டு குற்றத்தை வசதியாக எனக்கு வெளியே காட்சிப்படுத்தி விடுகிறேன். ஏமாற்றமும் காரணமும் எனக்குள்ளேயே இருக்க அவை உற்கத்தை அனுபவிக்க அனுமதிக்குமா? சிந்திப்போம்.

திருமணம் எனும் சம்பிரதாய சடங்கையும், அதன் வழியெழும் சிக்கலையும் தனியாளாக நின்று எதிர்கொள்ளும் பெண்ணொருத்தியின் போராட்டமே படத்தின் ஒன்லைன்.

பாலக்காட்டில் உள்ள தனியார் பள்ளி ஒன்றில் தற்காலிக ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார் அர்ச்சனா (ஐஸ்வரயா லக்ஷ்மி). குடும்பப் பொருளாதாரத்தை தனியாளாக நின்று தாங்கும் அவருக்கான திருமண சம்பந்தம் அமையக் காலமெடுக்கிறது. 30 சம்பந்தங்களைக் கடந்து 31-ஆவது அமைய,

# அர்ச்சனா 31 நாட் அவுட்

## யதார்த்தத்திற்கு நெருக்கம்

அதையொட்டிய திருமண ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்படுகின்றன. மகிழ்ச்சியான அந்தத் திருமண ஏற்பாடுகளை எதிர்பாராத விதமாக வரும் ஒரு தொலைபேசி அழைப்புப் பாழாக்கிவிட, அதை அர்ச்சனா எப்படி எதிர்கொண்டார்? திருமணம் நடந்ததா இல்லையா? - இதுதான் 'அர்ச்சனா 31 நாட் அவுட்' படத்தின் திரைக் கதை. படம் அமேசான் ப்ரைம் ஓடிடி தளத்தில் காணக் கிடைக்கிறது.




நீட்டி முழங்காமல் 1 மணி நேரம் 48 நிமிடத்தில் தான் சொல்ல வந்த கருத்தைச் சொல்லியிருக்கிறார் இயக்குநர் அகில் அனில் குமார். சிறுகதையில் கதை மாந்தர்களின் அறிமுகத்தைப்போல படத்தின் முதல் பாதியில், அர்ச்சனா யார், அவளது தினசரி வாழ்க்கை என்ன என்பதோடு கதைக்களத்தின் வெம்மையையுடன், நிலம் சார்ந்த மனிதர்களின் வாழ்வியலை பதிய வைக்கிறார். பொறுமையாக நகரும் திரைக்கதை மக்களின் வாழ்க்கையோடு இழைகிறது. இடைவேளைக்கு பிறகு சூடுபிடிக்கும் படம் இறுதிக்கட்டத்தை நெருங்கும் காட்சிகளில் தன் முன் நிற்கும் சவாலை அர்ச்சனா எதிர்கொள்ளும் விதம் குறித்து அறியும் ஆவலைத் தூண்டுகிறது.

நடுத்தர, உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்ணாக, இயல்புக்கு நெருக்கமான நடிப்பை பதிவு செய்திருக்கிறார் ஐஸ்வர்யா லக்ஷ்மி. மொத்தப் படத்தையும் தாங்கிச்செல்லும் அவர், பக்கத்துவீட்டு பெண்ணைப்போல 'நடிப்பால் படத்திற்கு

உயிர்கொடுக்கிறார். 28 தொடங்கி 30 வயதின் முற்பகுதியில் திருமணமாகாத ஒரு பெண்ணை சமூகம் எப்படியெல்லாம் வசைபாடும் என்பதுடன், அதனை அந்தப் பெண் எப்படி எதிர் கொள்வார் என்பதையும் மிகையில்லா முகபாவனைகளுடன், தனித்த உடல்மொழி மூலம் கொண்டு வந்திருக்கும் விதம் ஈர்க்கிறது. அவரைத் தவிர்த்து ஹக்கீம் ஷாஜஹான், ஜேம்ஸ் வர்கீஸ், உள்ளிட்ட படத்தின் துணைக் கதாபாத்திரங்களின் காட்சிகளுக்கான பங்களிப்பும் நிறைவு. குறிப்பாக வசனமில்லாமல் வெறும் பாவனைகளின் வழியே உணர்வுகளை கடத்தியிருக்கும் இந்திரன்ஸ் மிரட்டியிருக்கிறார். சில காட்சிகள் வந்தாலும் கவனிக்க வைக்கிறார்.

'என் கல்யாணத்த சாத்திரியாரோ, ப்ரோக்கரோ முடிவு பண்ண முடியாது' என ஐஸ்வர்யா லக்ஷ்மி உச்சக் காட்சியில் உடைத்துப் பேசும் வசனம் காட்சிகளின் அடர்த்தியைக் கூட்டுகிறது. சுய உழைப்பில் குடும்பத்தின் சுமையைத் தாங்கியிருக்கும் பெண்ணுக்கு கூடுதல் பாரமாகும் திருமணச் செலவுகள்,தோள்கொடுக்காத உறவுகள், கனவுகளுக்குப் போடப்படும் வேலி, பொதுச் சமூகத்தின் வசைமொழிகள் எனச் சொல்லப்படாத / அரிதான காட்சிகளின் பதிவாகியிருக்கிறது படம். பொறுமையாக நகரும் திரைக்கதையை சில இடங்களில் கடக்க கூடுதல் பொறுமை தேவைப்படுகிறது.

ஜோயல் ஜோஜி ஒளிப்பதிவும், ரஜத் பிரகாஷ் பிண்ணனி இசையும் யதார்த்த சினிமாவுக்கான பங்களிப்பை கொடுத்த போதிலும், பாடல்கள் திணிக்கப்பட்ட உணர்வு எழாமலில்லை. ஐஸ்வர்யா லக்ஷ்மிக்கு கிரிக்கெட்டில் ஆர்வம் இருப்பதாக காட்டியிருப்பது கதையோட்டத்திற்கு எந்த வகையில் தேவை என்பதும், அது சொல்லவந்த காரணமும் தெளிவாக இல்லை. நிறையக் கதாபாத்திரங்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அவை கதையோட்டத்திற்குப் பெரியளவில் பலத்தையோ, சுவாரஸ்யத்தை கொடுக்கவில்லை. ஒரு சில இடங்களில் தர்க்கப் பிழைகளையும் உணர முடிகிறது.

நடுத்தர உழைக்கும் பெண் ஒருவரின் தன்னந்தனியான திருமணப் போராட்டத்தை காட்சிப்படுத்திருக்கும் விதத்திற்காகவும், சொல்ல வரும் கருத்துக்காகவும் 'அர்ச்சனா 31 நாட் அவுட்' படத்திற்கு உங்கள் ஒருமணி நேரம் 48 நிமிடத்தை தயங்காமல் செலவழிக்கலாம்.



'உண்மைதான்... அது சரி உங்கை பாருங்கோ கோயில் மதிலோடையல்லே றோட்டு வருகுது... றோட்டுக்கெண்டு கரையிலை இருக்கவேண்டின இடை வெளிகூட இல்லை... அதுக்குள்ளை உப்பிடி வாகனங்களையும் விட்டால்? ஒருத்தரும் உதுகளைளப் பாக்கிறேல் லையோ?' எண்டு கேட்டன். 'இப்ப இஞ் சாலை தள்ளி வாங்கோ...எங்களைப் போலை ஆக்களைக் கேப்பங்கள் றோட்டு உங்கடை சொந்தமோவெண்டு ஆனால் உதுகளைக் கேக்காங்கள்' எண்டார் மணியத்தார்.

'சந்தியே பிரச்சனைதான் என்ன... கோயில் மூலையைத்தவிர மற்ற மூண்டு பக்கமும் றோட்டிலையல்லே நீட்டிக் கொண்டு கடையள் கிடக்கு? அப்பிடி யிருக்க வாகனங்களையும் நிப்பாட் டினா? போறது வாறது பாருங்கோவன் படுகிறபாட்டை... இதுகளை ஒருத்த ரும் பாக்கக் கேக்க இல்லையோ?' எண்டு முருகேசர் ஆதங்கப்பட்டார். 'கேக்க வேண்டின ஆக்களும் இதக்காலைதான் திரியினம்... கேக்கிற மாதிரித் தெரி யேல்லை' எண்டார் மணியத்தார்.

'சட்டங்கள் நுணுக்கங்களெண்டு கொண்டாடுகிறவையும் இதுகளைப் பாக்காயினமோ? றோட்டுப் போடக்கு முன்னமே இந்த விசயங்களைப் பாக்கி றேல்லையோ?' எண்டு நான் கேட்ட துக்கு 'உங்கை சங்கானை ரவுண் படு கிற கேவலத்தை?... காரைநகர் யாழ்ப் பாண றோட்டும் மற்ற றோட்டுகளோடை நடக்க வேண்டினது... எத்தினை வரு சம்? போடத்துவங்கினாப் பிறகுதான் அது இதுவெண்டு கூத்தடிக்கினம்... கான் கட்டினாத்தான் றோட்டெண்டாப் பிறகுதான் கடையள் பின்னாலை போனாத்தான் கான் எண்டினம்... இப்ப முடிவு றோட்டு இல்லையெண் டாயல்லே போச்சுது...' எண்டார் மணி யத்தார்.

'அப்ப றோட்டு இனிப் போடாங் களோ?' எண்டு கேட்டார் முருகேசர். 'அப்ப கல்லுக்குப்போட்ட கணக்கிலை இப்பகொட்டுற கடகமே வாங்கேலா தல்லே... கொன்றாக் எடுத்தவன் ஓமாமோ?' எண்டார் மணியத்தார். 'உதுக்குள்ளை அரசாங்கம் உந்த கொன் றாக்ரர்மாருக்கு கோடிக்கணக்கிலை கடன் குடுக்க முடியாமலுக்கு இருக் கெண்டல்லே சொல்லுகினம் அப்பிடிப் பாத்தா வேலையள் இனிமேல் அப்பி டியிப்பிடித்தான் நடக்கப்போகுது என்ன?' முருகேசர். 'நக்கினார் நாவி ழந்தாரெண்டிறது இதைத்தான்.. அப்ப மணியண்ணை நாங்கள் நடக்கட் டுமோ?' எண்டுகொண்டு அங்காலை போட்டம்.

# நானே வருவேன்

## தொய்வு




அண்ணன் செல்வராகவனும் தம்பி தனுஷும் சேர்ந்து மீண்டும் வழங் கியிருக்கும் திரைப்படம் 'நானே வருவேன்'.

கதிர் மற்றும் பிரபு என இரட்டையர் கதாபாத்திரங்களை ஏற்று நடித்தி ருக்கிறார் தனுஷ். அண்ணனாக வரும் கதிர் சிறுவயதிலேயே பெரும் தவறுகளை செய்யக்கூடிய எதற்கும் துணிந்தவராக இருக்கிறார். சாத்திரி யார் கூறும் காரணத்தினால், இருவரும் பிரிகின்றனர்.

**20** வருடங்களுக்குப் பிறகு, பிரபு தனக்கென ஒரு மனைவி, மகள், நல்ல வேலை என அனைவரும் கண் வைக்கக் கூடிய அளவுக்கு நிம்மதியான ஒரு வாழ்க்கையை வாழ்கிறார்.

இதில் திருப்புமுனை உண்டாகும் வகையில் மகள் சத்யா ஒரு பிரச்னையில் சிக்குகிறார். இந்தப் பிரச்னையின் மூலம் நீண்ட வருடங்களுக்குப் பிறகு அண்ணன் கதிர் மீண்டும் எப்படி பிரபுவின் வாழ்க்கையில் வருகிறார். இதிலிருந்து மகள் சத்யாவை மீட்க பிரபு எந்த எல்லை வரை செல்கிறார். இறுதியில் மகள் சத்யாவின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாரா இல்லையா என்பதுதான் நானே வருவேன் படத்தினுடைய கதை.

டீசர், டிரெய்லர், பாடல்களிலேயே தனுஷ் இரட்டை வேடங்களில் வருவதையும், ஒருவர் நல்லவர், ஒருவர் கெட்டவர் என்பதையும் வெளிப்படுத்திவிட்டனர்.

இந்தக் கதையைத் தெரிந்து கொண்டுபோய் படத்தைப் பார்த்தாலும், முதல் பாதி ஆச்சரியமளிக்கும். காரணம், நாம் எதிர்பார்த்திராத பாணியில் முதல் பாதியை அற்புதமாக நகர்த்திச் சென்றிருக்கிறார் செல்வராகவன்.

பதின்பருவப் பெண் குழந்தையின் தந்தையின் உணர் வுகளை தனுஷ் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். முதல் பாதி படத்துக்கு ஒளிப்பதிவாளர் ஓம் பிரகாஷ் மற்றும் இசையமைப்பாளர் யுவன்ஷங்கர் ராஜா பலம் சேர்த்திருக்கின்றனர்.

நாம் பார்த்த கதை வகை என்றாலும் அதைக் காலத் துக்கேற்ப அறிவியல் ரீதியாக அணுகலாம் என முயற்சித்துள்ளனர். ஆனால், அது குறித்து சற்று ஆழமாக விவரித் திருக்கலாமோ என்கிற எண்ணம் எழாமல் இல்லை. ஆனால் சொல்லக்கூடிய அளவுக்கு இது பிரச்னையுமில்லை.

காரணம், இடைவேளையின்போது படம் ஒரு உச்சத்தைத் தொட்ட பிறகு, படத்தின் 2ஆம் பாதியை இன் னும் ஆழமாக எழுதியிருக்கலாமோ என்ற எண்ணம் வருவதுதான் சோகம்.

இதற்கு உதாரணம், படத்தின் இரண்டாம் பாதியில் யோகி பாபுவைப் பார்த்து, நீ ஏன் இவனுடன் வந்திருக்கிறாய் என நடிகர் பிரபு கேட்பார். இதற்குப் பதிலாக, நீங்கள் ஏன் வந்திருக்கிறீர்கள் என நான் திருப்பிக் கேட்டால் என்ன செய்வீர்கள் என யோகி பாபு பதிலளிப்பார்.

படம் பார்க்கும் ரசிகர்களுக்கு, இவர்கள் இருவரும் (நடிகர் பிரபு மற்றும் யோகி பாபு) ஏன் இரண்டாம் பாதி யில் (படத்திலென்றுகூட வைத்துக்கொள்ளலாம்) வருகி றார்கள் என்ற கேள்வி எழும் என்பதை முன் கூட்டியே கணித்து செல்வராகவன் மேல் குறிப்பிட்டுள்ள உரையாடலைப் படத்தில் வைத்திருக்கக்கூடும்.

இரண்டாம் பாதி தொடக்கத்திலிருந்து முற்றிலும் கதிரின் உலகம் விவரிக்கப்படுகிறது. கதிராக தனுஷ் வரும் காட்சிகளில் யுவன்ஷங்கர் ராஜா வழக்கத்தைப்போல தனது பின்னணி இசையில் மிரட்டியிருக்கிறார். தனுஷும் மிரட்டியிருப்பார். ஆனால், என்னவோ அந்தக் கதாபாத்திரத்தைப் பின்தொடர முடியாத அளவுக்கு ஒட்டாமலே உள்ளது.

சில படங்களில், முக்கியப் பாத்திரம் தவறுகள் செய்தாலும், தார்மீகத்தின் அடிப்படையில் படம் பார்க்கும் ரசிகர்கள், அந்தக் கதாபாத்திரத்தின் பின்னணியில் இருப்பார்கள். காரணம், அதற்கான நோக்கங்கள், காரணங்கள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கும்.இதில், கதிர் பெரிய குற்றங்கள் செய்தாலும், அதற்கான காரணங்கள் என்ன என்பது வெறும் வரிகளிலும் பாட லிலுமே வருகிறது. பிரச்னையின் வேரைத் தொடாமல்/விளக்காமல், நுனிப்புல்லை மட்டும் மேய்ந்தது போல இருந்தது கதிரின் கதாபாத்திரம். இதனாலயே, படத்தின் இரண்டாம் பாதி தொய்வாக உள்ளது.

## ஐ.நா. தீர்மானத்தை...

தீர்மானத்தை நடைமுறைப்படுத்த 60 லட்சம் அமெரிக்க டொலர் நிதி தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
ஐ.நாவின் நிகழ்ச்சித் திட்டமிடல் மற்றும் நிதி ஒதுக்கீட்டுப் பிரிவு பணிப்பாளர் ஜொகன்னஸ் ஹூஸ்மன் இந்த மதிப்பீட்டை வழங்கியுள்ளார். தீர்மானத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விடயங்களை 2022, 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில் நடைமுறைப்படுத்துவதற்கு 60 லட்சத்து 92 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதி தேவை என்று அவர் மனித உரிமைகள் பேரவைச் செயலருக்கு அறிவித்துள்ளார்.
பொறுப்புக்கூறலை முன்னகர்த்தும் நோக்கத்தோடு மனித உரிமைகள் தொடர்பில் நிகழ்ந்த குற்றங்களோடு தொடர்புடைய ஆவணங்களை, ஆதாரங்களை பத்திரப்படுத்தி அவற்றை ஆய்வு செய்வது தொடர்பில் தீர்மானம் குறிப்பிடும் விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்கே பெருமளவான நிதி தேவை என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் கண்காணித்து அறிக்கையிடும்படி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர் ஆணையரைக் கோரும் தீர்மானப் பகுதியை நடைமுறைப்படுத்துவதற்கும் கணிசமான நிதி தேவை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இவற்றை 2024ஆம் ஆண்டு வரை நிறைவேற்றுவதற்குத் தேவையான படிமுறைகள் மற்றும் நிதி தொடர்பான ஜொகன்னஸ் மதிப்பிட்டுள்ளார். தேவையான இந்த நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக ஐ.நா. பொ-துச் சபைக்கு அனுப்பப்படும்.
நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை ஏற்கப்போவதில்லை என்று இலங்கை அரசு தெரிவித்திருக்கின்றது. அதேநேரம் இந்தத் தீர்மானம் தமிழ் மக்களின் நீதிக்கான தேடலுக்குத் தீர்வைத் தரவில்லை என்று தமிழ்த் தரப்பும் இதனைக் கண்டிக்கிறது. இப்படி தொடர்புடைய இரண்டு தரப்பினாலும் ஒதுக்கப்படும் ஒரு தீர்மானத்தை நடைமுறைப் படுத்த பெருமளவு நிதி செலவிடப்படவுள்ளது குறித்து அரசியல் அவதானிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## முக்கிய...

என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மார்கழி மாதம் 18ஆம் நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
கொவிட் நுண்தீமி (வைரஸ்) தாக்கம் காரணமாக ஏற்பட்ட நிலைமைகளை அடுத்து கடந்த இரண்டு வருடங்களாக இந்தப் பரீட்சைகளை உரிய காலத்தில் நடத்த முடிந்திருக்கவில்லை. இந்த ஆண்டு அவை சீராக உரிய காலத்தில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.10.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781